# பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு

## பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல்

ஜூன் 2022



# பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம்: பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல்

ஜூன் 2022

வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் பொருளாதாரக் குழு இந்த ஆய்வு அறிக்கையைத் தொகுத்து வழங்குகிறது. இந்தக் குழுவில்; யாஸ்மின் ராஜி மற்றும் தாரினி சமரசிங்க ஆகியோர் உள்ளனர்.

ஆய்வுக்கான உதவியை சாமலி ஜினதாஸ மற்றும் அவந்தி செனவிரத்ன ஆகியோர் வழங்கியுள்ளனர்.

ஒட்டுமொத்த ஆய்வுக்கான வழிகாட்டல், உள்ளடக்க மீளாய்வு மற்றும் மேற்பார்வையை நிஷான் டி மெல், தேஷல் டி மெல் மற்றும் நிலங்கிக பெர்னான்டோ ஆகியோர் வழங்கியுள்ளனர்.
மொழிசார் தொகுப்பினை மாதர ரன்முத்துகல முன்னெடுத்துள்ளதுடன் ஏட்ரியன் மார்க்கஸ் வடிவமைத்துள்ளார்.

பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு: பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல் = Gender-Responsive Budgeting: Evaluating Key Performance Indicators / தொகு. யாஸ்மின் ராஜி சக தரிணி சமரசிங்க; மொழி. ப்ரியா ஆலாலசுந்தரம் - கொழும்பு: வெரிட்டே ரிசேர்ச் 2022. - ப. 74; சமீ. 26.

ISBN 978-624-5514-24 33

i. 339.523 டிவி 23
ii. தலைப்பு
iii. ராஜி, யாஸ்மின் (தொகு.)
iv. சமரசிங்க, தரிணி (தொகு.)
v. ஆலாலசுந்தரம், ப்ரியா (மொழி.)

1. வரவுசெலவு திட்டம் - இலங்கை
2. பொது நிதி

பரிந்துரைக்கப்பட்ட மேற்கோள்கள்: வெரிட்டே ரிசேர்ச் (2022). பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு: பிரதான செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பிடுதல்: கொழும்பு: வெரிட்டே ரிசேர்ச்

முக்கிய சொற்பதங்கள்;: பால்நிலை வரவு செலவுத் திட்டம், பாலின விழிப்புணர்வு, பாலின சமத்துவம், பாலினப் பொருளாதாரம்

ஏனைய ஆய்வறிக்கைகளைப் பதிவிறக்கம் செய்ய: https://www.veriteresearch.org/publication_type/research-reports/

உங்கள் கருத்துக்களை மின்னஞ்சல் செய்யுங்கள்: publications@veriteresearch.org

பதிப்புரிமை © 2022 வெரிட்டே ரிசேர்ச் பிரைவேட் லிமிடெட். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை.

## உள்ளடக்கங்கள்


**அறிமுகம்** 4

**மதிப்பீட்டிற்கான முறை** 7

தரவு சேகரிப்பு

முன்னேற்றத்தின் சுருக்கம்

நடைமுறைப்படுத்துவதற்குத் தெளிவான கட்டமைப்பு இல்லாமை

அமைச்சுக்கள் மத்தியில் குறைந்துவரும் பொறுப்புக்கூறல்

மேற்பார்வை செய்யும் அமைச்சுக்களிடமிருந்து புதிய தகவல்கள் கிடைக்காமை

குறைவான தகவல் வெளிப்பாடு

தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்கள் கிடைப்பதில் தாமதமும் நிராகரிப்புகளும்

அமைச்சரவை மாற்றங்களினால் திறனின்மை

**இலங்கையில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம்: எதிர்கால நடவடிக்கைகள்** 20

**முடிவு** 23

**பின்னிணைப்புகள்** 24

பின்னிணைப்பு 1: தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கைகளின் விபரங்கள்

சுட்டி 1: தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றுதல் சதவீதத்தை அதிகரித்தல் 34

சுட்டி 2: நிதியுதவித் திட்டங்கள் மூலம் வீடுகளைக் கட்டுகின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் 39

சுட்டி 3: பால் அடிப்படையில் தரவுகளைப் பிரித்துப் பேணுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை 41

சுட்டி 4: தேசிய தொழிற்பயிற்சி (NVQ) சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதத்தை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிற்சி துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தல் 43

சுட்டி 5: எஸ்எம்ஈ கடன்கள்/மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை 47

சுட்டி 6: வெளிநாட்டிலிருந்து திரும்புகிற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை 49

சுட்டி 7: தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையை கொள்கை தலையீடுகள் மூலம் அதிகரித்தல் 52

சுட்டி 8: பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை 55

சுட்டி 9: அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை 57

சுட்டி 10: மகளிர் மற்றும் சிறுவர் தொடர்பான விவகாரங்களை நேர்த்தியாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் கையாளுகின்ற ஆற்றலுடைய பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை 59

சுட்டி 11: திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை 61

சுட்டி 12: பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 63

பின்னிணைப்பு 3

பின்னிணைப்பு 4

பின்னிணைப்பு 5

# அறிமுகம்

அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய கருவியாக வரவு செலவுத்திட்டம் உள்ளது. அத்துடன் அரசியல் மற்றும் சமூக கொள்கைகளில் அரசாங்கத்தின் முன்னுரிமையையும் இது பிரதிபலிக்கிறது. இதன் விளைவாக வரவு செலவுத்திட்டங்கள் அரசியல் ரீதியாக "நடுநிலையானதாகவோ" பால்நிலை நடுநிலையானதாகவோ இருப்பதில்லை. செலவின முறைகள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் வெவ்வேறு பாலினங்களுக்கு வெவ்வேறு வகையான தாக்கத்தை ஏற்படுத்துவதை கடந்த கால சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.[1] பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்டம் (GRB - Gender-responsive budgeting) என்பது வரவு செலவுத்திட்டத்தின் அனைத்து நிலைகளிலும் பால்நிலை பரிமாணங்களை உள்ளடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட செயலாக்கம் ஆகும். இது திட்டமிடப்பட்ட செலவினம் செயல்பாட்டின் மூலம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடும் செயன்முறை அல்லது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான பலன்கள் கிடைப்பதை உறுதிசெய்வதற்காக சட்டம், கொள்கைகள் மற்றும் திட்டங்களை உள்ளடக்கிய எந்தவொரு செயல்முறையை குறிக்கிறது.[2]

ஏறக்குறை 30 ஆண்டுகளுக்கு முன்பு பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம் முதன்முதலில் நடைமுறைக்கு வந்தபோதே பல நாடுகள் அதை ஏற்றுக்கொண்டன. அரசாங்கத்தின் செலவினங்கள் எவ்வாறு பெண்களுக்குப் பலனளிக்கின்றன மற்றும் பால்நிலை சமத்துவத்திற்கு வரவு செலவுத்திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை மதிப்பிடுமாறு ஐக்கிய நாடுகள் சபை பீஜிங் பிளார்ட்போர்ம் ஃபோர் ஆக்ஷனில் (BPfA - Beijing Platform for Action) அழைப்பு விடுத்த 1995ஆம் ஆண்டு முதல் பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்டத்தின் முன்முயற்சிகளைப் பயன்படுத்துவது கருத்தில் கொள்ளப்பட்டது.[3] பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்டம் மூலம் வெற்றிகரமான விளைவுகளைப் பெற்றுக்கொண்ட வளர்ந்துவரும் நாடுகளுக்கான உதாரணமான ருவாண்டா மற்றும் எதியோப்பியாவில் GRB மூலம் முக்கிய விடயங்களான (அதாவது பாடசாலையில் அனுமதி மற்றும் சுகாதாரம்) நிதிக் கொள்கைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன் பொருளாதார மற்றும் அரசியல் துறைகளில் பெண்களின் பங்களிப்பும் அதிகரித்துள்ளன. போதுமான நிதியுதவி, வெற்றிகரமான நடைமுறைப்படுத்தல், அனைத்து முடிவுகளையும் தொடர்ச்சியாகக் கண்காணித்தல் போன்ற முக்கியமான காரணிகள் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்தை ருவாண்டா பின்பற்ற உதவின.[4]

பாலின வரவு செலவுத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான இலங்கையின் முயற்சிகள் இப்போதுதான் ஆரம்பித்துள்ளன. இலங்கையின் பாலின வரவுசெலவுத்திட்டத்தை ஊக்குவிக்கும் சமீபத்திய முயற்சியாக 2018ம் ஆண்டில் பாலின பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் உருவாக்கப்பட்டதுடன் அறிமுகப்படுத்தப்பட்டன. 2018 வரவுசெலவுத்திட்ட அழைப்பில், 2017 முதல் 2019 வரையில் நடுத்தர கால வரவுசெலவுத்திட்டக் கட்டமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்திற்கான சில ஆரம்ப நடவடிக்கைகளை நிதியமைச்சின் கீழுள்ள தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் அறிமுகப்படுத்தியது.

அதன் பிரகாரம், அனைத்து அமைச்சரவை அமைச்சுக்கள், இராஜாங்க அமைச்சுக்கள், மாகாண சபைகள் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டிய 12 பிரதான

செயலாற்றுகை சுட்டிகளை பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு உருவாக்கியது[5] (காண்பிப்பு 1 ஐப் பார்க்கவும்). ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளில் பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளை வலுவூட்டுதல் என்னும் 5வது இலக்குக்கு அமைவாக இந்தப் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.6 மேலும் 2019-2021 நடுத்தரக்கால நிதிக் கட்டமைப்பின் கீழ் அமைச்சுக்கள் இந்த 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம் தகவல் சமர்ப்பிக்க வேண்டும் என வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 2/2019 (நிதியமைச்சினால் வெளியிடப்பட்டது) குறிப்பிடுகிறது. எனவே 2020 மற்றும் 2021 வரவு செலவுத்திட்ட தயாரிப்பிலும் பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்டக் கொள்கை தொடரப்படும் என்பது தெளிவாகிறது.

அனைத்து அமைச்சுக்களும் மாகாண சபைகளும் இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து தேசிய வரவு செலவுத் திணைக்களத்திடம் தகவல் சமர்ப்பிக்க வேண்டும். மேலதிகமாக, இந்தப் பொது அதிகாரசபைகள் பாலின விடயங்களைக் கையாள்வதற்கென அலுவலர் ஒருவரை நியமிப்பதுடன், பால் அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகளை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கவும் கடமைப்பட்டுள்ளன.

வரவு செலவுத்திட்ட அழைப்பில் குறிப்பிடப்பட்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகளை அடைவதில் இலங்கையின் செயல்திறன் மிகக் குறைவாக உள்ளது. 83 சதவீதமான அமைச்சுக்கள் எந்தவொரு முன்னேற்றத்தையும் எட்டவில்லை, 17 சதவீதமான அமைச்சுக்கள் பலவீனமான முன்னேற்றத்தைப் பதிவுசெய்துள்ளன என்பதை பிரதான செயலாற்றுகை சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மதிப்பிடும் வெரிட்டே ரிசேர்ச்சின் 2021ம் ஆண்டு அறிக்கை காட்டுகிறது. பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பில் காணப்படும் கட்டுப்பாடுகள் அர்த்தமுள்ள முன்னேற்றத்திற்குத் தடையாக விளங்குவதை அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

இலங்கையிலுள்ள பொது அதிகாரசபைகள் வழங்கியுள்ள தகவல்களின் அடிப்படையில், இந்த ஒவ்வொரு பிரதான செயலாற்றுகை சுட்டியின் முன்னேற்றம் தொடர்பில் வெரிட்டே ரிசேர்ச் தொடர்ந்தும் மதிப்பிட்டது. பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் 2019 முன்னேற்றத்தை 2020ம் ஆண்டுடன் ஒப்பிடுவதே இந்த அறிக்கையின் முக்கிய நோக்கமாகும். மேலும் இந்த பிரதான செயலாற்றுகை சுட்டிகள் தொடர்பான தகவல்களை அரசாங்கம் எவ்வாறு ஆவணப்படுத்துவதுடன் கண்காணிக்கின்றன என்பதிலுள்ள முக்கிய பிரச்சினைகளையும் இடைவெளிகளையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது (பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்தில் எதிர்காலத்தில் இலங்கையின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளையும் வழங்க முற்படுகிறது).

**காண்பிப்பு 01: மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சினால் உருவாக்கப்பட்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகள்**

| பி.செ.சு | தலைப்பு |
|---|---|
| 1 | தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றுதல் சதவீதத்தை அதிகரித்தல்; |
| 2 | நிதியுதவி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வீடுகளைக் கட்டுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்; |
| 3 | பால் அடிப்படையில் தரவுகளைப் பிரித்துப் பேணுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை; |
| 4 | தேசிய தொழிற்பயிற்சி (NVQ) சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதத்தை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிற்சித் துறையில் தொழில் புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தல்; |
| 5 | எஸ்எம்ஈ (SME) கடன்கள்/மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை; |
| 6 | வெளிநாட்டிலிருந்து திரும்புகிற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை; |
| 7 | தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையை கொள்கை தலையீடுகள் மூலம் அதிகரித்தல்; |
| 8 | பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை; |
| 9 | அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை; |
| 10 | மகளிர் மற்றும் சிறுவர் தொடர்பான விவகாரங்களை உணர்திறன் மற்றும் வினைத்திறன்மிக்கதாகவும் கையாளுகின்ற ஆற்றலுடைய பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை; |
| 11 | திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்றன சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை; |
| 12 | பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை; |

# மதிப்பீட்டிற்கான முறை

## தரவு சேகரிப்பு

பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்த தகவல்களைச் சேகரிப்பதற்காக சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடம் தகவல் அறியும் உரிமை (RTI) சட்டத்தின் கீழ் வெரிட்டே ரிசேர்ச் பல கோரிக்கைகளைத் தாக்கல் செய்தது. இந்த நிறுவனங்களின் விரிவான பட்டியல் மற்றும் கோரப்பட்ட தகவல்களின் வகைக்கு இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.

தகவல் அறியும் உரிமை (RTI) கோரிக்கைகளைத் தாக்கல் செய்தது மாத்திரமன்றி, பிரதான செயலாற்றுகை சுட்டிகளைச் செயல்படுத்துவது தொடர்பாக வலைதள தேடல்கள் மூலமும் வெரிட்டே ரிசேர்ச் தகவல்களைப் பெற்றுக்கொண்டது.2019 முதல் 2020 வரையில் இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை இந்த அறிக்கை மதிப்பிடுகிறது. இரண்டாவது ஆண்டு மதிப்பீட்டுக்கான தரவுச் சேகரிப்பு ஒக்டோபர் 2021 தொடங்குவதால் 2021ம் ஆண்டுக்கான முன்னேற்றம் இந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை.

### A. மதிப்பீட்டு முறை

பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் வகையை அடிப்படையாகக் கொண்டு முன்னேற்றம் மதிப்பிடப்பட்டது.

ŀசட்டம், ஒழுங்குமுறை அல்லது கொள்கை சார்ந்த (பிரதான செயலாற்றுகை சுட்டிகள் 6, 9, மற்றும் 11) பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் பின்வரும் நான்கு வகைகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன:

- தகவல் வெளிப்படுத்தப்படவில்லை: பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து எந்தத் தகவல்களும் வலைதளங்களில் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் தகவல் அலுவலர்களுடன் தொடர்ந்து மதிப்பீட்டுக் குழு தொடர்பிலிருந்து வந்தாலும், பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகளில் எந்தவிதப் பயனுள்ள தகவல்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

- முன்னேற்றம் இல்லை: மதிப்பீட்டு காலத்தின் தொடக்கத்திலிருந்து பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தில் எந்த மாற்றமும் காணப்படவில்லை அல்லது மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனப் பெறப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றன.

- பலவீனமான முன்னேற்றம்: மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கும் கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறை மாற்றம் ஒருமுறை மட்டுமே நிகழ்ந்துள்ளது.

- வலுவான முன்னேற்றம்: மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்திற்குப் பங்களிக்கும் கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறையில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

அளவிடக்கூடிய அல்லது எண்ணக்கூடிய பிரதான செயலாற்றுகை சுட்டிகளுக்கான முன்னேற்றம் (பிரதான செயலாற்றுகை சுட்டிகள் 1, 2, 3, 4, 5, 7, 8, 10 மற்றும் 12) பின்வரும் ஐந்து வகைகளின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளன:

- தகவல் வெளிப்படுத்தப்படவில்லை: பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து எந்தத் தகவல்களும் வலைதளங்களில் கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அமைச்சரவையின் தகவல் அலுவலர்களுடன் தொடர்ந்து மதிப்பீட்டுக் குழு தொடர்பிலிருந்து வந்தாலும், பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகளில் எந்தவிதப் பயனுள்ள தகவல்களும் வெளிப்படுத்தப்படவில்லை.

- மோசமான முன்னேற்றம்: மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் குறைந்தது/மோசமடைந்தது (அதாவது அளவிடப்படும் சுட்டி மதிப்பீட்டு காலத்தில் எதிர்மறையான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது).

- முன்னேற்றம் இல்லை: மதிப்பீட்டு காலத்தின் தொடக்கத்திலிருந்து பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தில் எந்த மாற்றமும் காணப்படவில்லை அல்லது மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை எனப் பெறப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றன.

- பலவீனமான முன்னேற்றம்: மதிப்பீட்டு காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் 0 – 10சதவீதம் வரையில் காணப்படுகிறது.


- வலுவான முன்னேற்றம்: மதிப்பீட்டுக் காலத்தில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றம் 10 சதவீதத்திற்கும் அதிகமாகக் காணப்படுகிறது.

2022ம் ஆண்டுக்கான மதிப்பீடுகளில் முன்னேற்றம் தொடர்பான வகைகள் முந்தைய ஆண்டிலிருந்து சிறிது வித்தியாசப்படுகின்றன. 2021 மதிப்பீட்டு வகைகளில் (ஆண்டு 1) முன்னேற்றம் இல்லை என்பதில் தகவல் கிடைக்கவில்லை மற்றும் முன்னேற்றம் இல்லை என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. ஆனால் 2022 மதிப்பீடுகளில் இவை 'முன்னேற்றம் இல்லை' மற்றும் 'தகவல் வெளிப்படுத்தப்படவில்லை' என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பொறுப்பான நிறுவனங்கள் தாமாக முன்வந்தோ கோரிக்கை விடுக்கப்படும்போதோ தரவு மற்றும் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்பதைக் கட்டாயமாக்க வேண்டும் என்பதால், தகவல்கள் எந்த அளவில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுவதை உறுதிசெய்வதற்காக முந்தைய ஆண்டின் முடிவுகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படும்போது புதிய முறைக்கு அமைவாக மாற்றப்பட்டுள்ளன.


## முன்னேற்றத்தின் சுருக்கம்

2019 இலிருந்து 2020 வரை எந்தவொரு பிரதான செயலாற்றுகை சுட்டியும் அதன் இலக்குகளை எட்டவில்லை. பெரும்பாலான சுட்டிகள் (9 சுட்டிகள், 75 சதவீதம்) தொடர்பில் எந்தவொரு தகவலும் வெளிப்படுத்தப்படவில்லை, ஒரு சுட்டி (8 சதவீதம்) தொடர்பில் எந்த முன்னேற்றமும் இல்லை, 2 சுட்டிகள் (17 சதவீதம்) தொடர்பில் முன்னேற்றம் மோசமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை ஆண்டு இரண்டுக்கான மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஒப்பீட்டளவில் (காண்பிப்பு 4 ஐப் பார்க்கவும்) சுட்டி 1 (ஆண்டு ஒன்றில் பலவீனமான முன்னேற்றம் எனப் பதிவாகியிருந்தது), சுட்டி 5 (ஆண்டு ஒன்றில் எந்தவிதத் தகவலும் வெளிப்படுத்தப்படவில்லை) ஆகிய இரண்டு சுட்டிகளின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளதால் ஆண்டு இரண்டில் அவை மோசமான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளதாகப் பதிவாகியுள்ளன. பெரும்பாலான தகவல்கள் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதை இரண்டு ஆண்டுகளின் மதிப்பீட்டை நோக்கும்போது முக்கியமாகக் கவனிக்க முடிகிறது. ஆகவே சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் தெளிவுத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை தொடர்ந்தும் மாறாமலே உள்ளது.

காண்பிப்பு 2: 2019 மற்றும் 2020க்கு இடையே சுட்டிகளின் முன்னேற்றம் (ஆண்டு 2)




காண்பிப்பு 3: 2018 மற்றும் 20219க்கு இடையே சுட்டிகளின் முன்னேற்றம் (ஆண்டு 1)



**காண்பிப்பு 4: ஆண்டு 1 (2018/2019) மற்றும் ஆண்டு 2 (2019/2020) இல் உள்ள 12 பி.செ.சு. க்களுக்கான செலவு ஒதுக்கீடு மற்றும் முன்னேற்ற வகைப்பாடு**

**KPI 1** — தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றுதல் சதவீதத்தை அதிகரித்தல்

| | 2018/19[7] | 2019/20[8] |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | பலவீனமான முன்னேற்றம் | மோசமான முன்னேற்றம் |
| செலவு | செலவினம்: ரூ. 28 மில்லியன் | செலவினம்: ரூ. 2.1 மில்லியன் |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 2** — நிதியுதவி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக வீடுகளைக் கட்டுகின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை |
| செலவு | செலவினம்: N/A | செலவினம்: ரூ. 7 மில்லியன் |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 3**

## பால் அடிப்படையில் தரவுகளைப் பிரித்துப் பேணுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை |
| செலவு | செலவினம்: N/A | செலவினம்: N/A |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 4**

## தேசிய தொழிற்பயிற்சி (NVQ) சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதத்தை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிற்சித் துறையில் தொழில் புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தல்

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | பலவீனமான முன்னேற்றம் | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை |
| செலவு | செலவினம்: N/A | செலவினம்: N/A |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 5**

**எஸ்எம்ஈ கடன்கள்/மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை**

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | மோசமான முன்னேற்றம் |
| செலவு | செலவினம்: ரூ. 70 மில்லியன் | செலவினம்: ரூ. 7 மில்லியன் |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 6**

**வெளிநாட்டிலிருந்து திரும்புகிற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை**

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | செலவினம்: ரூ. 3 மில்லியன் | முன்னேற்றம் இல்லை |
| செலவு | செலவினம்: N/A | செலவினம்: N/A |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

KPI 7

## தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையை கொள்கை தலையீடுகள் மூலம் அதிகரித்தல்

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை |
| செலவு | செலவினம்: ரூ. 4 மில்லியன் | செலவினம்: N/A |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

KPI 8

## பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை |
| செலவு | செலவினம்: ரூ. 93 மில்லியன் | செலவினம்: ரூ. 2.6 மில்லியன் |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 9**

**அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை**

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை |
| செலவு | செலவினம்: N/A | செலவினம்: N/A |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 10**

**மகளிர் மற்றும் சிறுவர் தொடர்பான விவகாரங்களை நேர்த்தியாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் கையாளுகின்ற ஆற்றலுடைய பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை**

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை | தகவல் வெளிப்படுத்த-ப்படவில்லை |
| செலவு | செலவினம்: ரூ. 38 மில்லியன் | செலவினம்: ரூ. 26 மில்லியன் |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 11**

**திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்றன சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை**

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை |
| செலவு | செலவினம்: ரூ. 12 மில்லியன் | செலவினம்: N/A |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

**KPI 12**

**பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை**

| | 2018/19 | 2019/20 |
|---|---|---|
| முன்னேற்றத்தின் வகைப்படுத்தல் | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை | தகவல் வெளிப்படுத்தப்படவில்லை |
| செலவு | செலவினம்: ரூ. 62 மில்லியன் | செலவினம்: ரூ. 10 மில்லியன் |

பின்னிணைப்பை பார்க்க இங்கே கிளிக் செய்யவும்

# பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடும்போது எதிர்கொண்ட சவால்கள்

கடந்த ஆண்டு மதிப்பீட்டின்போது அடையாளம் காணப்பட்ட சில பலவீனங்களையும் சிக்கல்களையும் சரிசெய்யவும் நோக்கத்தை உறுதிசெய்யவும், இரண்டாவது ஆண்டு மதிப்பீட்டில் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டமைப்பு மற்றும் வழிமுறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும், இரண்டாம் ஆண்டுக்கான மதிப்பீட்டிலும் அதே போன்ற சவால்களையே எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

## நடைமுறைப்படுத்துவதற்குத் தெளிவான கட்டமைப்பு இல்லாமை

இலங்கையில் பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்டத்தின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான மிக முக்கியமான சவால்களில் ஒன்று, பாலினச் சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதற்கான கட்டமைப்பு தெளிவாக இல்லை. 12 சுட்டிகளின் நோக்கம் மற்றும் அவற்றுக்குப் பொறுப்பான அமைப்புகள் தொடர்பில் விபரங்கள் இல்லை என்பது ஆண்டு 1 மதிப்பீட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரு சுட்டியை நிறைவேற்றுவதற்கு எந்த அமைச்சு பொறுப்பாக உள்ளது என்பதையும் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு அமைச்சுக்களிடம் இருந்து எந்த வகையான தகவல்களைப் பெற வேண்டும் என்பதையும் முடிவு செய்வதை இது சவாலாக்கியது. கூடுதலாக, நடைமுறைப்படுத்துதல் மற்றும் கண்காணிக்கும் நோக்கங்களுக்காக சுட்டிகளின் கீழ் எந்தவொரு இலக்குகளோ காலக்கெடுக்களோ செயற்பாடுகளோ பட்டியலிடப்படவில்லை. இவ்வாறு இந்த சுட்டி முன்னேற்றம் அடைந்துள்ளது என்பதை எவ்வாறு முடிவு செய்வது என்பதைக் கண்டறிவது சவாலாக விளங்கியது.

ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சுக்களைக் கண்டறிந்து தகவல் அறியும் கோரிக்கைகளைத் தாக்கல் செய்ய மதிப்பீட்டுக் குழு நடவடிக்கை எடுத்தது. குறித்த சுட்டி அந்த அமைச்சினால் கையாளப்படும் விடயங்கள் மற்றும் துறைகளுடன் பொருந்துவதுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டதா என்பதன் அடிப்படையில் குறிப்பிட்ட சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்கள் கோரப்பட்டன. இந்தச் சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு நியாயமான வரம்புகளையும் குழு உருவாக்கியது.[9] கூடுதலாக, ஆண்டு ஒன்றில் பெறப்பட்டதை விட சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் கூடுதலான தகவல்களை அமைச்சுக்களிடம் இருந்து பெறுவதற்காக ஆண்டு இரண்டில் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்ட அமைச்சுக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட்டன.[10]

## அமைச்சுக்கள் மத்தியில் குறைந்துவரும் பொறுப்புக்கூறல்

நடைமுறைப்படுத்துவதற்கான தெளிவான கட்டமைப்பு அல்லது சுட்டிகளின் முன்னேற்றத்தை அடைவதற்கான திட்டம் இல்லாமையால் அவற்றின் முன்னேற்றத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கவும் பொறுப்புக்கூறுவதற்குமான உத்வேகம் அமைச்சுக்களுக்கிடையே இல்லை. உதாரணமாக, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு[11] ஆகியவற்றிடம் பால்நிலை அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவை (சுட்டி 3) அமைச்சுக்கள் சமர்ப்பிப்பதில் எதிர்கொண்ட தாமதங்களையும் சிரமங்களையும் தகவல் அறியும் கோரிக்கைக்குக் பதிலளிக்கும்போது மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சு விவரித்திருந்தது. மேலதிகமாக ,சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் முன்னர் (ஆண்டு ஒன்றில்) தகவல்களை அளித்திருந்த பல அமைச்சுக்கள்(உதாரணம்,தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதம் மற்றும் தொழில்நுட்ப தொழில்பயிற்சித் துறையில் தொழில் புரிகின்ற பெண்களின் எண்ணிக்கை தொடர்பில் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு[12]) சுட்டியின் முன்னேற்றம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு எடுக்கும் நேரம் காரணமாக ஆண்டு இரண்டில் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் கோரிக்கைகளுக்கு உரிய நேரத்தில் பதிலளிக்கத் தவறியிருந்தன.

## மேற்பார்வை செய்யும் அமைச்சுக்களிடமிருந்து புதிய தகவல்கள் கிடைக்காமை

தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 2/2019ல் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம், இலங்கையில் பாலினம் தொடர்பான 12 பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் மேற்பார்வை செய்யும் பொறுப்பு நிதியமைச்சிடமும் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடமும் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் இந்த ஆண்டு (ஆண்டு 2) 12 சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக்கொள்ள இந்த இரண்டு அரச முகவரகங்களிடமும் தனித்தனியாக இரண்டு தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த அமைச்சுக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில்கள், முந்தைய ஆண்டில் (ஆண்டு 1) கிடைக்கப்பெற்ற பதில்களின் நகல் ஆகும் – 12 சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதில் எந்த அளவிற்கு மேற்பார்வை குறைபாடு உள்ளது என்பதை இது கடந்த ஆண்டை விட மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. சுட்டிகளின் முன்னேற்றத்தை மேற்பார்வை செய்ய வேண்டிய அமைப்புகள் அவற்றைக் கண்காணிப்பதில்லை என்பதும் இதனூடாக தெளிவாகத் தெரிகிறது.

மேலும், மேற்பார்வை செய்யும் அமைப்புகளான நிதியமைச்சும், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சும் 12 சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் தகவல்களைச் சேகரித்திருக்க வேண்டும், அமைச்சுக்கள் முழுவதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்திருக்க வேண்டும். ஆனால் சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு அவற்றிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில்களால் எந்தப் பயனும் இல்லை. மாறாக குறிப்பிட்ட சுட்டிகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் கோரிக்கைகளுக்குக் கிடைக்கப்பெற்ற பதில்கள் அமைச்சுக்களிடையே சுட்டிகளை நடைமுறைப்படுத்தப்படும் நிலை தொடர்பில் கூடுதல் தகவல்களைத் தந்தன (உதாரணமாக, 2018, 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளில் எஸ்எம்ஈ கடன்கள்/மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்றன பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை(சுட்டி 5) தொடர்பில் கைத்தொழில் அமைச்சு தகவல்களைத் தந்தது). எனினும் இந்தச் சுட்டி தொடர்பில் நிதியமைச்சோ மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சோ எந்தவிதத் தகவல்களையும் வழங்கவில்லை.

உண்மையில் நிதியமைச்சு அதன் தகவல் கோரிக்கைக்கான பதிலில், சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பான புதிய தகவல்களைத் தரும் பொறுப்பை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் ஒப்படைத்திருந்தது.[13] 12 சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதில் எந்தவித முன்னேற்றமும் இல்லை என மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டிருந்தது.

## குறைவான தகவல் வெளிப்பாடு

தகவல் அறியும் கோரிக்கைகளுக்குப் பதில் அளிப்பதில் அமைச்சுக்களிடையே காணப்படும் மோசமான நடைமுறை ஆண்டு ஒன்றைப் போலவே ஆண்டு இரண்டு மதிப்பீடுகளிலும் இடையூறுகளை ஏற்படுத்தின.

இதன் விளைவாக பெரும்பாலான அமைச்சுக்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களின் தரம் மோசமாகக் காணப்பட்டதுடன் இது சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பான ஒட்டுமொத்த மதிப்பீட்டில் பாதிப்பை ஏற்படுத்தின. ஆண்டு இரண்டில் 75 சதவீதமான சுட்டிகளின் (12ல் 9 சுட்டிகள்) முன்னேற்றம் 'போதுமான தகவல்கள் கிடைக்கவில்லை' என மதிப்பிடப்பட்டதில் இருந்து இது தெளிவாகிறது. சில அமைச்சுக்களிடம் இருந்து கிடைத்த பதில்கள் முழுமையானதாக இல்லாததால் கிடைத்த தகவல்களை மதிப்பிடுவது சிரமமாக இருந்தது. உதாரணமாக, சுட்டிகளுடன் தொடர்புடைய திட்டங்களின் வருடாந்த செயல் திட்டங்கள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் தங்கள் வலைதளத்தில் கிடைப்பதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டது. எனினும், அவற்றை அணுக நடவடிக்கை எடுத்தபோது இந்த அறிக்கைகளுக்கான இணைப்புகள் செயல்படாததுடன் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

கூடுதலாக, சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் தகவல்கள் கிடைக்காமைக்கான காரணங்களை வழங்கவும் அமைச்சுக்கள் தவறிவிட்டன. இவை அமைச்சுக்களிடம் இருந்து கோரப்பட்டபோதும் அதற்கான காரணங்களை வழங்கவில்லை. கோவிட் – 19 பெருந்தொற்றினால் 2020க்கான அரசாங்கத்தின் முயற்சிகள் மற்றும் வரவு செலவுத்திட்ட செயல்பாடுகள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். அதன் காரணமாக 12 சுட்டிகளின் முன்னேற்றமும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும். இருந்தபோதும், தகவல்களை வழங்குவதில் அமைச்சுக்கள் பின்பற்றும் மோசமான நடைமுறை, 2020ல் சுட்டிகளின் செயலாற்றுகையை மதிப்பீட்டுக் குழு மதிப்பிடுவதை மேலும் கடினமாக்கியது.

## தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்கள் கிடைப்பதில் தாமதமும் நிராகரிப்புகளும்

2016ம் ஆண்டின்12 ஆம் இல. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம், கோரிக்கைக்கான பதில் வழங்கப்பட வேண்டுமா நிராகரிக்கப்பட வேண்டுமா என்பதை அந்தச் சட்டத்தின் பிரிவு 5ல் குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் கோரிக்கை கிடைத்த 14 நாட்களுக்குள் அரசாங்க முகவரங்கள் அதன் தீர்மானத்தை வழங்க வேண்டும்.மேலும் கோரப்பட்ட தகவல்களை வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டால் தீர்மானம் எடுக்கப்பட்ட 14 நாட்களுக்குள் அந்தத் தகவல்களை வழங்க வேண்டும் எனவும் சட்டம் குறிப்பிடுகிறது.

இந்நிலையில் ஆண்டு இரண்டில் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்கள் அது தாக்கல் செய்யப்பட்ட அமைச்சினால் எந்தவித நியாயமான விளக்கங்களும் வழங்கப்படாமல் தாமதிக்கப்பட்டன. உதாரணமாக, ஒக்டோபர் 18, 2021 அன்று திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சிடம் தகவல் அறியும் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பதில் வழங்குவது தாமதமாக்கப்பட்டதுடன் தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்களை ஏற்றுக்கொள்வதற்கான காலக்கெடு (ஜனவரி 31, 2022) நிறைவடைந்த பின்னரே பதில் கிடைத்தது. அதேபோன்று ஒக்டோபர் 18, 2021 அன்று நீதியமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் கோரிக்கை தொடர்பில், கோரிக்கை கிடைத்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், இதுவரை எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.

அமைச்சு ஒன்று தகவல் அறியும் கோரிக்கையை நிராகரித்த சவாலையும் ஆண்டு இரண்டு மதிப்பீடு எதிர்கொண்டது. மகளிர் மற்றும் சிறுவர் தொடர்பான விவகாரங்களை நேர்த்தியாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் கையாளுகின்ற ஆற்றலுடைய பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை (சுட்டி 10) தொடர்பாக பொது பாதுகாப்பு அமைச்சிடம் தகவல் அறியும் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்தக் கோரிக்கையை அமைச்சு இலங்கை காவல்துறைக்கு அனுப்பியது. அங்கே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5(1))(h)(i) ஐக் காரணம் காட்டி நிராகரிக்கப்பட்டது.[14] கோரப்பட்ட தகவலின் தன்மை, குறிப்பாக நாட்டிலுள்ள பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்தை மதிப்பிடும் பின்னணியில், நாட்டில் எந்தவொரு குற்றத்தையும் தடுப்பதில் அல்லது கண்டறிவதில் இலங்கை காவல்துறைக்கு எதிரான தப்பெண்ணத்தை எந்த வகையிலும் தடுக்கவோ ஊக்குவிக்கவோ, குற்றவாளிகளைக் கைது செய்யவோ வழக்குத் தொடரவோ எந்த வகையிலும் தடையாக இருக்கும் என உத்தேசிக்கவில்லை. நாட்டில் சட்ட அமலாக்கம் தொடர்பான ரகசியத் தகவல்களின் அடையாளத்தையும் இது வெளிப்படுத்தியிருக்காது. எனவே கோரிக்கை நியாயமான காரணமின்றி நிராகரிக்கப்பட்டது.

## அமைச்சரவை மாற்றங்களினால் திறனின்மை

ஆண்டு ஒன்றைப் போலவே, அரசாங்கம் அடிக்கடி அமைச்சரவை அமைச்சுகளை மாற்றியது. சில சமயங்களில் ஒரே ஆண்டில் கூட அமைச்சுக்களை ஒன்று சேர்த்தும் பிரித்தும் வைத்தது. இது சுட்டிகளின்

முன்னேற்றம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதை குறிப்பிடத்தக்க அளவு பாதித்தது. இந்த நடைமுறை பொதுப் பணத்தைப் பயன்படுத்துவதில் அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைப்பதை எவ்வளவு கடினமாக்குகிறது மற்றும் இதன் காரணமாக அமைச்சுக்களால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் மோசமான ஒருங்கிணைப்பு தொடர்பில் விவரித்து 2020ல் வெரிட்டே ரிசேர்ச் வெள்ளை அறிக்கையை வெளியிட்டது.[15]

இதே நடைமுறை ஆண்டு இரண்டு மதிப்பீட்டிலும் காணப்பட்டது. உதாரணமாக, நிதியுதவித் திட்டங்கள் மூலம் வீடுகளைக் கட்டுகின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை (சுட்டி 2) குறித்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் கேட்கப்பட்ட தகவல்கள் வழங்கப்படவில்லை. தகவல்களை வழங்க முடியவில்லை என தீர்மானக் கடிதம் ஒன்றின் மூலமாக அமைச்சு தெரிவித்திருந்தது. ஓகஸ்ட் 9, 2020ல் குறித்த அமைச்சு உருவாக்கப்பட்டதாகவும், குறித்த அமைச்சு உருவாக்கப்படுவதற்கு முன்னதாக 2017ம் ஆண்டில் இந்தச் சுட்டி தொடர்பிலான வீடமைப்புத் திட்டங்களின் பயனாளர்கள் தேர்வு இடம்பெற்றதாகவும் அதில் தாங்கள் பங்கெடுக்கவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆண்டு ஒன்றில் இந்தத் தடைகள் சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு சவாலாக இருந்தது போலவே ஆண்டு இரண்டிலும் இருந்தன. ஏனெனில் இந்தச் சவால்கள் நிறுவன ரீதியாக இருப்பதால் அவற்றை ஒரு ஆண்டு காலத்திற்குள் சரிசெய்வது கடினமானது. இதன் விளைவாக, இந்தச் சுட்டிகளின் முன்னேற்றத்தை அடைவதற்கு அமைச்சுக்களைப் பொறுப்புக் கூறச் செய்வதும் அதன் மூலம் இலங்கையில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதும் சாத்தியமற்றதாகவே இருக்கிறது.

# இலங்கையில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம்: எதிர்கால நடவடிக்கைகள்

பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம் தொடர்பில் இலங்கையின் அர்ப்பணிப்பை 12 பிரதான செயலாற்றுகை சுட்டிகள் மூலம் இந்த அறிக்கை தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக மதிப்பிடுகிறது. அரசாங்கமானது அதனால் உருவாக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள் மீது வெளிப்படையாக அலட்சியத்துடனும் அர்ப்பணிப்பு இன்றியும் செயற்படுவதை மீண்டும் ஒருமுறை இந்த மதிப்பீட்டின் கண்டுபிடிப்புகள் வெளிப்படுத்துகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டது போன்று, 12 சுட்டிகளையும் நடைமுறைப்படுத்துவது தனிப்பட்ட நிரல் அமைச்சுக்கள் மட்டத்தில் மிகப் பலவீனமாக உள்ளது. அதை மேற்பார்வை செய்யும் அமைச்சுக்கள் அதைவிடக் குறைந்த ஒத்துழைப்பை வழங்குகின்றன. 12 சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பான புதிய தகவல்களை வழங்க முடியாதுள்ளன. வரவு செலவுத்திட்ட அழைப்பில் வழங்கப்பட்டிருந்த ஆணைக்கு அமைவாக மேற்பார்வை செய்யும் அமைச்சுக்கள் செயல்படவில்லை என்பது அவை அளித்த பதில்களின் மூலம் தெளிவாகிறது. மேற்பார்வை செய்யும் அமைச்சுக்களே இவ்வாறு செயல்படுவதால், அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதற்கும் சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் தனிப்பட்ட நிரல் அமைச்சுக்கள் அதிக கவனம் செலுத்துவதில்லை. இவ்வாறான திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் உருவாக்கத்திற்கு செலவிடப்படும் பொதுப் பணம் மற்றும் அரச வளங்களைக் கையாள்வதில் திறனின்மைக்கு இவ்வாறான நடவடிக்கைகள் பங்களிக்கின்றன.

தகவல்களை வெளிப்படுத்துவதில் காணப்படும் மோசமான நிலை பாரிய நிர்வாகச் சிக்கலின் ஒரு பகுதியாகும். அமைச்சுக்களிடையே வெளிப்படைத்தன்மை, ஒத்துழைப்பு ஆகியவை இல்லை என்பதைக் காட்டுகிறது. மேலும் பொதுப் பணத்தைப் பயன்படுத்துவதில் அவற்றை பொறுப்புகூற வைப்பதைச் சிரமமாக்குகின்றன. பல ஆண்டுகளாக அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் இது பொதுவான நிகழ்வாக இருப்பதை வெரிட்டேயின் budgetpromises.org தளம் பதிவுசெய்துள்ளது. பொதுப் பணத்தையும் அரச வளங்களையும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதை உறுதிசெய்யவும், வரவு செலவுத்திட்டத்தினால் சமூகத்திற்குக் கிடைக்கும் ஒட்டுமொத்த நன்மைகளைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமானால், எதிர்காலத்தில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட மூலோபாயங்கள் இந்த நிர்வாகச் சிக்கல்களைத் தீர்ப்பதுடன் 12 பால்நிலைச் சுட்டிகள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள தோல்விகளையும் சரிசெய்ய வேண்டும்.

## 1. எதிர்காலத்தில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட முன்முயற்சிகளுக்கு விரிவான கட்டமைப்பை நடைமுறைப்படுத்துதல்

### (அ) நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பான அமைப்பையும் காலக்கெடுவையும் குறிப்பிடுதல்

ஒவ்வொரு சுட்டிக்கும் பொறுப்பான அமைப்பை வரையறுப்பதில் காணப்பட்ட தெளிவின்மையால் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம் என்னும் பெயரில் பொதுப் பணத்தைப் பயன்படுத்துவதில் அமைச்சுக்களைப் பொறுப்புக்கூற வைப்பதில் சவால் காணப்படுவது 12 சுட்டிகளின் முன்னேற்றத்தை இரண்டாவது முறையாகவும் கண்காணித்ததன் மூலம் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே எதிர்காலத்தில் முன்மொழியப்படும் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்ட முன்முயற்சிகளுக்கு, அந்த முன்முயற்சிகளின் எந்தப் பணிகள்/ மூலோபாயங்களுக்கு எந்த அரசாங்க முகவரகம் பொறுப்பானது என்பது குறிப்பிட வேண்டும். கூடுதலாக, முன்னேற்ற இலக்குகளுக்கு காலக்கெடுக்களை வழங்குவது இலக்குகளை எட்டுவதற்குத் தேவையான வளங்களையும் நிதிகளையும் ஏற்பாடு செய்வதற்கு அமைச்சுக்களுக்கு உதவும். உதாரணமாக, 2022 வரவு செலவுத்திட்ட அழைப்பைத் தொடர்ந்து, எதிர்காலத்தில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டங்களை உள்ளடக்குவதற்கு ஆவணம் ஒன்றை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு வெளியிட்டது. இதில் நாட்டில் பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான குறிப்பிட்ட மூலோபாயங்கள், ஒவ்வொரு மூலோபாயத்திற்கும் பொறுப்பான சம்பந்தப்பட்ட அரசாங்க முகவரகங்களைக் குறிப்பிடப்பட்டதுடன் அவ்வாறான மூலோபாயங்களின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பிரதான செயலாற்றுகை சுட்டிகள் என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன.[16] இது மிகவும் வரவேற்கத்தக்கது என்பதுடன் இலங்கையில் பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்ட முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கான மிகவும் மேம்படுத்தப்பட்ட அணுகுமுறை (2017ல் 12 பிரதான செயலாற்றுகைச் சுட்டிகள் உருவாக்கப்பட்டது முதல்) ஆகும்.

### (ஆ) செயல்படுத்தும் கட்டமைப்பில் நிதி தொடர்பான திட்டத்தையும் உள்ளடக்குதல்

பல ஆண்டுகளாக அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் மற்றும் முன்முயற்சிகள் நிதித் திட்டமிடலில் பலவீனமாக உள்ளதை வெரிட்டேயின் budgetpromises.org[17] தளத்தின் கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. திட்டத்திற்குப் போதுமான நிதி இல்லாத காரணத்தால் இடைநடுவில் பல்வேறு திட்டங்கள் நிறுத்தி வைக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும், முன்மொழியப்படும் பல கொள்கைகளின் பின்னால் தெளிவான திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வு காணப்படுவதில்லை என்பதை இவ்வாறான நிகழ்வுகள் வெளிப்படுத்துவதுடன் நாட்டின் முன்னேற்றத்தையும் தடுக்கிறது.

இதேபோன்ற சந்தர்ப்பங்கள் ஆண்டு இரண்டிலும் காணப்பட்டன. சுட்டி 9 தொடர்பில் (அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றம் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை) பல்வேறு முன்முயற்சிகளும் திட்டங்களும் திட்டமிடப்பட்டு முன்மொழியப்பட்டிருந்தாலும் அந்த நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தால் போதியளவு நிதியை ஒதுக்க முடியாத காரணத்தால் திட்டங்களைத் தொடங்க முடியவில்லை என தகவல் கோரிக்கைக்குப் பதிலாக தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்திருந்தது. ஆகவே எதிர்காலத்தில் திட்டத்திற்குத் தேவைப்படும் செலவுகள், அதன் மூலம் கிடைக்கும் நன்மைகள், அவ்வாறான மூலோபாயங்களுக்கான நிதியளிப்புகள் ஆகியவை குறித்த விரிவான திட்டங்கள் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்துடன் இருக்க வேண்டும்.

## 2. பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட முன்முயற்சிகளுக்கான மேற்பார்வை வழிமுறைகளை வலுப்படுத்துதல்

### (அ) அறிக்கையிடல் கட்டமைப்பை வழங்குதல்

தகவல் அறியும் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்ட அமைச்சுக்களில் பெரும்பாலானவை என்ன தகவல்கள் அவர்களிடமிருந்து கோரப்பட்டன, இந்த 12 சுட்டிகளிலும் எது முன்னேற்றம் எனக் கருதப்படுகிறது என்பதில் மட்டுப்படுத்தப்பட்ட புரிதலைக் கொண்டிருந்தன என்பதைக் கடந்த 2 ஆண்டுகளாக முன்னெடுத்த மதிப்பீடுகள் சுட்டிக்காட்டுகின்றன. முன்னர் குறிப்பிடப்பட்டது போன்று, கிடைத்த பதில்களில் பெரும்பாலானவை சுட்டிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதில் பயனற்றவையாக இருந்தன. கூடுதலாக, இந்த அமைச்சுக்களிடம் இருந்து தகவல்கள் மற்றும் பதில்களைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதங்கள் அவை சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து மேற்பார்வையிடும் அமைப்புகளுக்குத் தொடர்ச்சியாக அறிக்கைகளை அனுப்புவதில்லை என்பதைக் காட்டுகிறது. அமைச்சுக்களின் தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வடிவங்களில் வழங்கப்பட்டிருந்தன.

இந்த திறனின்மைகளைத் தவிர்க்க, எதிர்காலத்தில் பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்ட மூலோபாயங்கள் உருவாக்கப்பட்டதும் அமைச்சுக்களுக்குத் தெளிவான மற்றும் சீரான அறிக்கையிடல் அமைப்பை வழங்க வேண்டும். அவ்வாறு செய்வதால் அரசாங்க முகவரகங்கள் முழுவதிலும் அறிக்கையிடுவதற்கான ஒரு முறையான வழிமுறை உருவாவதுடன் அவ்வாறான முன்முயற்சிகளின் முன்னேற்றம் சீரான மற்றும் சரியான நேரத்தில் அளவிடப்படுவதை உறுதிப்படுத்தும் (உதாரணம்: மேற்பார்வை அமைச்சுக்களுக்கு முன்னேற்றம் குறித்து மாதாந்தோறும் அல்லது ஆண்டுக்கு இருமுறை (ஒவ்வொரு ஆறு மாதங்களும்) அறிக்கை சமர்ப்பிப்பதைக் கட்டாயப்படுத்துதல், முனனேற்றத்தை எவ்வாறு அறிக்கையிடுவது என்பதற்கான அறிவுறுத்தல்களுக்கான வடிவம்/டெம்ப்ளேட் என்பவற்றை அரசாங்க முகவரகங்களுக்கு வழங்குதல் போன்றவை).

### (ஆ) மேற்பார்வை செய்யும் அமைப்புகள் திறமையான வழிமுறைகளைப் பின்பற்றுதல்

பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட முயற்சிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்குப் பொறுப்பான அரசாங்க அமைச்சுக்களை வெறுமனே வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை (உதாரணம், வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 2/2019) மூலம் தெரிவிப்பது போதுமானதல்ல. மேற்பார்வை செய்யும் அமைப்புகள் தொடர்ந்து பலவீனமாக உள்ளது என்பதை கடந்த இரண்டு ஆண்டுகளாக 12 சுட்டிகளை மதிப்பிட்டதன் மூலம் வெரிட்டே நிரூபித்துள்ளது. சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பிலான சமீபத்திய தகவல்களை வழங்குவதற்கு இரண்டு மேற்பார்வை அமைச்சுக்களிலும் தகவல் அலுவலர் ஒருவர் இல்லை. ஆகவே அறிக்கையிடல், கண்காணித்தல், மேற்பார்வை செய்யும் அமைச்சுக்களிடையே மதிப்பிடுதல் போன்ற வலிமையான வழிமுறைகளை உருவாக்குதல் எதிர்காலத்தில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட மூலோபாயங்கள் திறமையாக செயல்படுத்துவதை உறுதிசெய்யும்.

உதாரணமாக, மேற்பார்வை செய்யவும் நிர்வகிக்கவும் பிற அமைச்சுக்களிடம் இருந்து GRB முயற்சிகளின் முன்னேற்றத்தைச் சேகரிக்கவும், முயற்சிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள அணுகுவதற்கும் அமைச்சுக்குள் பொறுப்பான அலகு/அலுவலர் ஒருவரை மேற்பார்வை செய்யும் அமைச்சுக்கள் நியமிக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் வேலையை விட்டு விலகினாலோ அதே அமைச்சுக்குள் வேறொரு திணைக்களத்திற்கு மாற்றலானாலோ, வேறொரு உத்தியோகத்தருக்குப் பணி விவரங்கள் தெரிவிக்கப்பட்டு அந்தப் பணிகளை முன்னெடுக்க நியமிக்க முடியும்.

### (இ) மேற்பார்வை செய்வதற்கு அரசு சாரா அமைப்புகளை ஈடுபடுத்துதல்

வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைகளில் மேற்பார்வை செய்யும் அமைப்புகளின் பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அரசாங்கத்துடன் தொடர்புடைய (அரசாங்க அமைச்சுக்கள்) அமைப்புகள் பால்நிலை பொறுப்பு வரவுசெலவுத்திட்ட மூலோபாயங்களில் பலவீனமாக உள்ளன. ஆகவே கூடுதல் அறிக்கையிடல் அமைப்பை நடைமுறைப்படுத்துவதால் அவ்வாறான முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்படுவதை வலுப்படுத்தும். உதாரணமாக, மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான அமைச்சுக்கள் GRB முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வாறான முயற்சிகள் தொடர்பில் ஆர்வம் காட்டும் நிர்வாகம் சாரா அமைப்பு ஒன்றுக்கு (உதாரணம், பாராளுமன்றத்தில் பெண்கள் குழு) அறிக்கை வழங்குவதைக் கட்டாயமாக்க வேண்டும்.

## 3. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட மூலோபாயங்கள் குறித்த தெளிவுத்தன்மையை மேம்படுத்த வேண்டும்

GRBயின் முயற்சிகளை நடைமுறைப்படுத்த பொதுப் பணம் பயன்படுத்தப்படுவதால் இந்த நிதிகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன மற்றும் எந்த முயற்சிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன என்ற தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட அமைச்சுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறி க்கைகள் மும்மொழிகளிலும் இணையத்தில் கிடைப்பது GRB முயற்சிகளின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்தும். இவ்வாறு செய்வது சர்வதேச வரவு செலவுத்திட்ட நிரல்படுத்தலில் (சர்வதேச வரவு செலவுத்திட்ட பங்காளரினால் முன்னெடுக்கப்படும் வரவு செலவுத்திட்டத்தின் வெளிப்படைத்தன்மை தொடர்பான கருத்துக்கணிப்பு) இலங்கையின் தரநிலை உயர்வதற்கும் உதவும்.

# முடிவு

2018 வரவு செலவுத்திட்ட அழைப்பின் மூலம் பாலின பிரதான செயலாற்றுகை சுட்டிகளை அறிமுகப்படுத்தியது இலங்கையில் GRB நுட்பங்களை ஊக்குவிக்கும் ஒரு சிறந்த முயற்சியாகும். எனினும் வரவு செலவுத்திட்ட அழைப்பில் குறிப்பிடப்பட்ட பிரதான செயலாற்றுகை சுட்டிகளை அடைவதில் இலங்கையின் செயல்திறன் பலவீனமான உள்ளது தெளிவாகிறது. இந்த ஆண்டின் மதிப்பீடுகளின்படி 12 பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளில் 2 (சுட்டி 1 மற்றும் 5) மோசமான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளதுடன், 1 சுட்டி (சுட்டி 6) எந்த முன்னேற்றமும் இல்லை எனப் பதிவாகியுள்ளது. மீதமுள்ள அனைத்துப் பிரதான செயலாற்றுகை சுட்டிகள் தொடர்பில் எந்தவித தகவல்களும் வெளிப்படுத்தப்படவில்லை. இவை இந்த முயற்சிகள் தொடர்பிலான சவால்களையும் திறனின்மைகளையும் சுட்டிக்காட்டுகின்றன. பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம் இலங்கையில் ஒப்பீட்டளவில் புதியதாக இருப்பதால் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எதிர்காலத்தில் சிறந்த மற்றும் திறமையான கொள்கைகளை ஆதரிக்கவும் இந்தச் சுட்டிகளை மதிப்பிடும்போது நாங்கள் எதிர்கொண்ட சவால்களை சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகும்.

பிரதான செயலாற்றுகை சுட்டிகளை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் வகையில் தெளிவாக உருவாக்கப்பட்ட கட்டமைப்பு இல்லாதது இலக்குகளை நடைமுறைப்படுத்துவதைக் கைவிடுதல், முறையாகக் கண்காணிக்கத் தவறுதல் மற்றும் குறைவான மேற்பார்வை போன்றவற்றுக்கு வழிவகுத்துள்ளதைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக முன்னெடுத்த பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முடிவு வெளிப்படுத்துகிறது. மேலும், 12 சுட்டிகளும் அவற்றின் வரையறைகள், செயல்பாடுகள் மற்றும் அதற்குப் பொறுப்பான அமைச்சுக்கள் தொடர்பான விவரங்களைக் கொண்டிருக்கவில்லை. இதனால் ஒரு சுட்டிக்கு எந்த அமைச்சு பொறுப்பானது என்பதைக் கண்டறிவது சவாலாக இருந்தது. உரிமை அல்லது பொறுப்புக்கூற வேண்டிய தேவை இல்லாததால் பல அமைச்சுக்கள் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்களை வழங்கத் தவறியதுடன் முன்னேற்றம் குறைந்ததற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளத் தவறிவிட்டன. பிரதான செயலாற்றுகை சுட்டிகளுக்கான பொறுப்புக்கூறும் தேவை குறைந்து வருவதால், குறைந்த அளவில் தகவல்களை வெளிப்படுத்துவதை அமைச்சுக்கள் பின்பற்றுகின்றன. இது இந்த ஆண்டு சுட்டிகளை மதிப்பிடுவதில் முக்கிய சவாலாக அமைந்தது.

செயல்பாட்டுச் செயல்முறைகளுக்கான சரியான அடித்தளமின்றி பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்தை முன்வைப்பதற்கான அரசாங்கத்தின் அவசரத்தை இந்த சவால்களுக்கான காரணம் வலியுறுத்துகிறது. எனினும் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டம் வெற்றி பெறுவதை உறுதிசெய்வதற்கு இது அவசியம் ஆகும். மேலும் இவ்வாறான முயற்சிகளுக்குச் செலவிடப்படும் பணத்திற்கு அரசாங்கத்தைப் பொறுப்புக்கூற வைக்கும் உரிமையை பிரஜைகள் கொண்டிருந்தாலும் சுட்டிகள் தொடர்பான தகவல் வெளிப்படுத்துகை மட்டம் அதிலுள்ள சிரமத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆகவே எதிர்காலத்தில் இலங்கையில் பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட முயற்சிகளில் தெளிவான அறிக்கையிடல் கட்டமைப்பு, மேற்பார்வையிடும் நிறுவனங்களை வலுப்படுத்துதல் போன்ற வினைத்திறன்மிக்க பொறிமுறைகளைப் பின்பற்றுவது அவசியம் ஆகும். இதன் மூலம் பொதுமக்களின் பணத்தைச் செலவிடுவதில் அதிக திறனை உறுதிசெய்யவும் அதன் மூலம் இலங்கையில் பாலின சமத்துவத்தை அடையவும் முடியும்.

# பின்னிணைப்புகள்

## பின்னிணைப்பு 1 : தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கைகளின் விபரங்கள்

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| 1. | நிதியமைச்சு | அனைத்துச் சுட்டிகள் தொடர்பாகவும் தரவு மற்றும் தகவல்கள் சேகரிக்கும் மேற்பார்வையிடும் அமைப்பு | ▪ அனைத்துப் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்கள்<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் 12 சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து தகவல்களைச் சமர்ப்பித்த அமைச்சுக்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ கண்காணிப்பிற்காக அமைச்சு பயன்படுத்தும் உள்ளக நடவடிக்கைகள்/அளவீடுகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலர்களின் பட்டியல் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **2.** | மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு | பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தகவல்களைப் பராமரிக்கும் மற்றும் அனைத்துச் சுட்டிகள் தொடர்பாகவும் தரவு மற்றும் தகவல்களைச் சேகரிக்கும் மேற்பார்வையிடும் அமைப்பு | ▪ அனைத்துப் பிரதான செயலாற்றுகைச் சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்கள்<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் 12 சுட்டிகளின் முன்னேற்றம் குறித்து தகவல்களைச் சமர்ப்பித்த அமைச்சுக்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ கண்காணிப்பிற்காக அமைச்சு பயன்படுத்தும் உள்ளக நடவடிக்கைகள்/அளவீடுகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலர்களின் பட்டியல் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **3.** | தொழில் அமைச்சு | சுட்டி1 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளதுநடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் தொழிற்படையில் பெண்கள் பங்களிப்பின் சதவீதம்<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் சுட்டி 1 உடன் தொடர்புடைய தொழில் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விபரங்கள்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு<br>▪ சுட்டி 1 நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க தொழில் அமைச்சு எடுத்த நடவடிக்கைகளுக்கான ஆவணங்கள் /தகவல்கள்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **4.** | வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு (MoFEMD - State Ministry of Foreign Employment and Market Diversification) | சுட்டி 6 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் வெளிநாட்டிலிருந்து திரும்புகின்ற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காகக் கொண்ட தேசியக் கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் சுட்டி 6 தொடர்பில் MoFEMD முன்னெடுத்த திட்டங்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்கள்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு<br>▪ சுட்டி 6 நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க MoFEMD எடுத்த நடவடிக்கைகளுக்கான ஆவணங்கள் /தகவல்கள்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும் |

VR

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **5.** | தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு (SMDM - State Ministry of National Security and Disaster Management) | சுட்டி 9 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின்போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாகச் செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் சுட்டி 9 தொடர்பில் SMDM முன்னெடுத்த திட்டங்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்கள்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு<br>▪ சுட்டி 9 நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க SMDM எடுத்த நடவடிக்கைகளுக்கான ஆவணங்கள் /தகவல்கள்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **6.** | பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | சுட்டி 7 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின்போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாகச் செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் சுட்டி 7 தொடர்பில் அமைச்சு முன்னெடுத்த திட்டங்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்கள்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு<br>▪ சுட்டி 7 நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க அமைச்சு எடுத்த நடவடிக்கைகளுக்கான ஆவணங்கள் /தகவல்கள்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **7.** | நீதியமைச்சு | சுட்டி 11 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2017, 2018, 2019 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயல்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை<br>▪ செயல் திட்டங்கள் மற்றும் பாலின அடிப்படையில் பிரிக்கப்படுகின்ற தரவு உட்பட சுட்டி 11 தொடர்பில் நீதியமைச்சு முன்னெடுக்கும் திட்டங்களின் பட்டியல்<br>▪ சுட்டி 11 நடைமுறைப்படுத்தலின் நிலை<br>▪ சுட்டி 11 ஐ கண்காணிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான எதிர்காலத் திட்டங்கள்<br>▪ சுட்டி 11 ஐ நடைமுறைப்படுத்தாவிட்டால் அதற்கான ஆவணங்கள்<br>▪ SDG 5 தொடர்பில் நீதியமைச்சினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள்<br>▪ அமைச்சின் பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **8.** | பொதுப் பாதுகாப்பு அமைச்சு | சுட்டி 10 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் மகளிர் மற்றும் சிறுவர் தொடர்பான விவகாரங்களை நேர்த்தியாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் கையாளுகின்ற ஆற்றலுடைய பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் சுட்டி 10 தொடர்பில் அமைச்சு முன்னெடுத்த திட்டங்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்கள்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு<br>▪ சுட்டி 10 நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க அமைச்சு எடுத்த நடவடிக்கைகளுக்கான ஆவணங்கள்/தகவல்கள்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **9.** | திறன் விருத்தி இராஜாங்க அமைச்சு<br><br>இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு | சுட்டி 4 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்கள் மற்றும் தொழில்நுட்ப தொழில் பயிற்சித் துறையில் தொழில் புரிகின்ற பெண்களின் எண்ணிக்கை<br>▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் சுட்டி 4 தொடர்பில் அமைச்சு முன்னெடுத்த திட்டங்களின் பட்டியல்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுடன் தொடர்புடைய செயல்திட்டங்கள் மற்றும் நிதி தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளின் விவரங்கள்<br>▪ அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்காகச் சேகரிக்கப்பட்ட பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு<br>▪ சுட்டி 4 நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்க அமைச்சு எடுத்த நடவடிக்கைகளுக்கான ஆவணங்கள் /தகவல்கள்<br>▪ சுட்டி 4ன் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலை<br>▪ சுட்டி 4 ஐக் கண்காணிக்கவும் நடைமுறைப்படுத்தவும் எதிர்காலத் திட்டங்கள்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ அமைச்சின் பணிகளுக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பில் அமைச்சால் பராமரிக்கப்படும் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்கள் மற்றும் தகவல் அமைப்புகள்<br>▪ எந்தத் தகவலும் கிடைக்கவில்லை எனில் அதைக் குறிப்பிடவும், தகவல் கிடைக்காமைக்கான காரணங்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும் |

| | அரசாங்க ஸ்தாபனம் | ஸ்தாபனத்தின் வகிபங்கு | கோரப்பட்ட தகவல் |
|---|---|---|---|
| **10.** | கைத்தொழில் அமைச்சு | சுட்டி 5 நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வையிடும் அமைச்சாகக் கண்டறியப்பட்டுள்ளது | ▪ 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் எஸ்எம்ஈ கடன்கள் /மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை<br>▪ செயல்திட்டங்கள் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு உட்பட சுட்டி 5 உடன் தொடர்புடைய திட்டங்கள்<br>  ▫ செயல் திட்டங்கள் அல்லது நிதி தொடர்பான முன்னேற்றங்கள் குறித்த விபரங்கள்<br>  ▫ பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவு<br>▪ சுட்டிகளின் முன்னேற்றம் தொடர்பில் கண்காணிப்பதற்கு அமைச்சு முன்னெடுத்த உள்ளக நடவடிக்கைகள் /படிகள்<br>▪ பால்நிலை தொடர்பான விடயங்களுக்கான தகவல் அலுவலரின் தொடர்பு விபரங்கள்<br>▪ எந்தத் தகவலையும் வழங்க முடியாவிட்டால் அதை உறுதிப்படுத்தும் வகையில் உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கவும் |

| சுட்டி 1: தொழிற்படையில் பெண்களின் பங்குபற்றுதல் சதவீதத்தை அதிகரித்தல் | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **மோசமான முன்னேற்றம்**[18] | **மூலங்கள்:**<br>1) தொழில் அமைச்சு<br>2) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (DCS)<br>3) நிதியமைச்சு<br>4) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

1.1

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் தொழிற்படையில் பெண்கள் பங்கேற்பின் வருடாந்த வீதத்தை தகவல் அறியும் கோரிக்கைக்கான பதிலில் தொழில் அமைச்சு வழங்கியிருந்தது.

இணையத்தில் தேடியபோது, தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு தொடர்பான 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளுக்கான தகவல்களை தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வழங்கியிருந்தது.

**தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு வீதம்**

| ஆண்டு | தொழில் அமைச்சு | தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|---|
| 2018 | 34.9% | 33.6% |
| 2019 | 35.4% | 34.5% |
| 2020 | 33.9% | 32.0% |

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் வேலைப் பாதுகாப்பு மற்றும் பெண் தொழிலாளர்களின் நல்வாழ்வு தொடர்பில் தொழில் திணைக்களம் நடாத்திய திட்டங்களையும் தொழில் அமைச்சு பட்டியலிட்டிருந்தது. திட்டங்கள் தொடர்பான சுருக்கமான விபரங்கள், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் பயனாளர்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தச் சுட்டியை மதிப்பிடும்போது, தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பின் வருடாந்த அதிகரிப்பு 0 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இருந்தால் பலவீனமான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது. 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தால் வலுவான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது.

1.1

தொழில் அமைச்சு வழங்கிய தகவலின் பிரகாரம் 2019 இலிருந்து 2020ல் தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு 1.5 சதவீதத்தால் குறைந்துள்ளது. எனினும் தொழில் அமைச்சு வழங்கிய தகவலுக்கும் இணையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவலுக்கும் இடையே முரண்பாடு உள்ளது. 2019இலிருந்து 2020ல் பெண்களின் பங்கேகற்பு 2.5 சதவீதத்தால் குறைந்துள்ளதாக தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல்கள் குறிப்பிடுகின்றன. மத்திய வங்கி போன்ற அரச நிறுவனங்கள் மற்றும் உலக

| ஆண்டு | திட்டம் | நிதி ஒதுக்கீடு | பயனாளர்களின் எண்ணிக்கை (பெண்கள்) |
|---|---|---|---|
| 2018 | மகளிர் தினத்துடன் தொடர்புடைய நிகழ்வுகள் | ரூ. 1,004,492 | |
| | இரவுப் பணிகளில் பெண்களைப் பயன்படுத்துவது தொடர்பான விசாரணை | ரூ. 246,500 | 5,943 |
| | உளவியல் ஆலோசனை பயிலரங்கு | ரூ. 42,600 | |
| | பணியிடத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை குறித்து மீளாய்வு செய்வதற்கான பயிலரங்கம் | ரூ. 31,200 | |
| மொத்தம் | | ரூ. 1,324,792 | |

வங்கி போன்ற சர்வதேச அமைப்புகள் உத்தியோகபூர்வ புள்ளிவிபரமாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல்களைப் பயன்படுத்துவதால் இந்தச் சுட்டியை மதிப்பிடுவதற்கு மதிப்பீட்டுக் குழு தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல்களைப் பயன்படுத்துகிறது.

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் திணைக்களம் நடாத்திய திட்டங்களுக்கான பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவை தொழில் அமைச்சு வழங்கவில்லை. ஆகவே இந்தத் திட்டங்களால் ஆண்களை விடப் பெண்கள் அதிகம் பயனடைந்தார்களா என்பதை மதிப்பிடுவது கடினமாக உள்ளது. கூடுதலாக, இந்தத் திட்டங்கள் முற்றுமுழுதாக சுட்டி 1 உடன் சம்பந்தப்பட்டவை அல்ல என அமைச்சு குறிப்பிட்டுள்ளது. ஆனால் தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க மறைமுகமாகப் பங்களித்துள்ளன எனத் தெரிவித்துள்ளது. பெண்களின் பங்களிப்பை ஊக்குவித்தல் "தொழில் திணைக்களத்தின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டது" எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.[19]

1.2

இந்தத் திட்டங்கள் தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பை நேரடியாக அதிகரித்தனவா என்பது தெளிவில்லாததால் நிதியமைச்சு வழங்கிய தகவல்கள் இந்தச் சுட்டியை மதிப்பிடுவதில் பயனில்லாமல் போயின. கூடுதலாக, வழங்கப்பட்ட தகவல்கள் 2018ம் ஆண்டுக்கு

| ஆண்டு | திட்டம் | நிதி ஒதுக்கீடு | பயனாளர்களின் எண்ணிக்கை (பெண்கள்) |
|---|---|---|---|
| 2019 | தொழில் சட்டம் தொடர்பில் தனியார் துறையிலுள்ள மனித வளத்துறை அலுவலர்களுக்குக் கற்பித்தல் | ரூ. 149,073 | |
| | பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பிற நிறுவனங்கள் முன்னெடுக்கும் பணிகளுக்கு உதவுதல் | | |
| | தனியார் துறை பணியாளர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துதல் (4 திட்டங்கள்) | ரூ. 134,600 | 208 |
| | பால்நிலை அடிப்படையிலான வன்முறை குறித்த விழிப்புணர்வு தொடர்பில் பெண் தொழிலாளர்களின் திறனை வளர்த்தல் | ரூ. 110,800 | 75 |
| | தோட்டத் தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்கள் (பெண்களுக்கான தொழில் சட்டங்கள் மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில்) (3 திட்டங்கள்) | ரூ. 100,765 | 106 |
| மொத்தம் | | ரூ. 495,238 | |
| 2020 | மகளிர் தினத்துடன் தொடர்புடைய நிகழ்வுகள் | ரூ. 114,275 | |

மட்டுமே தொடர்புடையதாக இருந்தன. இது சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதை மேலும் கடினமாக்கியது.

1.3

சுட்டி 1 தொடர்பில் அமைச்சு முன்னெடுத்த திட்டங்களுக்காக செலவிடப்பட்ட நிதி 2020ல் குறைந்துள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு வழங்கிய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2020ல் செலவிடப்பட்ட மொத்த நிதி ரூ.0.018 மில்லியன், இது 2019 உடன் ஒப்பிடுகையில் 99 சதவீத வீழ்ச்சியாகும்.

நிதியமைச்சு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் பயனற்றவையாக இருந்ததால், இந்தச் சுட்டியை மதிப்பிடுவதற்கு தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தகவல்களில் மாத்திரமே மதிப்பீட்டுக் குழு முழுமையாகத் தங்கியிருந்தது. 2019 இலிருந்து 2020ல் தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதால் இந்தச் சுட்டி மோசமான முன்னேற்றத்தைக் கொண்டுள்ளது என வகைப்படுத்தப்படுகிறது.

| ஆண்டு | திட்டம் | நிதி ஒதுக்கீடு | பயனாளர்களின் எண்ணிக்கை (பெண்கள்) |
|---|---|---|---|
| மொத்தம் | | ரூ. 114,275 | |

1.2

சுட்டி 1 தொடர்பில் 2018ம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் குறித்து அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சு சமர்ப்பித்த தகவல்களை, தகவல் கோரிக்கைக்கான பதிலில் நிதியமைச்சு வழங்கியிருந்தது.

| ஒருங்கிணைந்த சேவைகள் | பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | ஆண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | பெண் உத்தியோகத்தர்களின் சதவீதம் |
|---|---|---|---|
| இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை | 1,107 | 648 | 63.07 |
| அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை | 145 | 136 | 51.06 |
| இலங்கை நூலகர் சேவை | 154 | 20 | 88.50 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை | 27,142 | 10,905 | 71.54 |
| முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை | 20,180 | 7,408 | 73.15 |
| இணைந்த சாரதிகள் சேவை | | 8,650 | |
| அலுவலக ஊழியர் சேவை | 6,013 | 9,813 | 38 |

பாலின அடிப்படையிலான வரவு செலவுத்திட்டம் மற்றும் சுட்டி 1 தொடர்பில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமப்பு அமைச்சு சமர்ப்பித்த

தகவல்களையும் நிதியமைச்சு வழங்கியிருந்தது. வழங்கப்பட்ட தகவல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது:

| சுட்டி | திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| தொழிற்படையில் பெண்களின் பங்கேற்பு வீதத்தை அதிகரித்தல் | பல்வேறு சேவைகளில் பணிக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் | 40% | திணைக்களத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன |

1.3

தகவல் கோரிக்கைக்கு வழங்கப்பட்ட பதிலில்,[20] 2018 – 2020 காலப்பகுதியில் இந்தச் சுட்டி தொடர்பான 3 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு குறிப்பிட்டது. இவை மாதிரி கிராமத் திட்டங்கள், சூழலியல் சுற்றுலா, சுய வேலைவாய்ப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது எனவும் குறிப்பிடப்பட்டது. இந்த வேலைத் திட்டங்களுக்காக 2018/19ல் ரூ.28.03 மில்லியனும், 2019ல் ரூ.2.106 மில்லியனும், 2020ம் ஆண்டில் ரூ.0.018 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.

| சுட்டி 2: நிதியுதவித் திட்டங்கள் மூலம் வீடுகளைக் கட்டுகின்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **Sources:**<br>1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு<br>2) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு<br>3) நிதியமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

2.1

தகவல் அறியும் கோரிக்கைக்கு அளித்த பதிலில், தங்கள் அமைச்சு ஓகஸ்ட் 9, 2020 அன்று உருவாக்கப்பட்டதால் வீடமைப்புத் திட்டங்களுக்கான பயனாளர்கள் தெரிவில் தாங்கள் பங்கேற்கவில்லை என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்திருந்தது. இதன் விளைவாக, தகவல் அறியும் கோரிக்கை கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும் கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. ஆனால் இதுவரை பதில் வழங்கப்படவில்லை.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்ட மற்றொரு தகவல் அறியும் கோரிக்கை தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாயக் கட்டமைப்பு இராஜாங்க அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. நிதியுதவித் திட்டங்கள் மூலமாக வீடுகளைக் கட்டிய பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பில் அந்த இராஜாங்க அமைச்சு பதிலளித்திருந்தது.

| ஆண்டு | வீடமைப்புத் திட்டங்களின் எண்ணிக்கை | பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2018 | 30 | 197 |
| 2019 | (செயல்படுத்தப்படவில்லை) | (செயல்படுத்தப்படவில்லை) |
| 2020 | 7 | 28 |

2.3

சுட்டி 2 தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் குறித்து மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளம் தகவல்களை வழங்கியிருந்தது. 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. 2020ல் இந்தத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ.0.2225 மில்லியன் ஆகும்.

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தச் சுட்டியை மதிப்பிடும்போது, பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையில் வருடாந்த அதிகரிப்பு 0 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இருந்தால் பலவீனமான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது. 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தால் வலுவான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது.

2.1

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாயக் கட்டமைப்பு இராஜாங்க அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் பெப்ரவரி 10, 2020 திகதியிடப்பட்டிருந்தன. தகவல் அறியும் கோரிக்கைகளுக்கான பதில்கள் கிடைக்கப்பெறுவதற்கு மதிப்பீட்டுக் குழு முடிவுசெய்த காலக்கெடுவுக்கு (ஜனவரி 31, 2022) பின்னரே இது கிடைத்தது. ஆகவே இந்தச் சுட்டியின் முன்னேற்றத்தை வகைப்படுத்துவதற்கு இந்தத் தகவல் பயன்படுத்தப்படாது. எனினும் இந்தத் தகவலைப் பயன்படுத்தினால் 2018 இலிருந்து 2020ல் வீடமைப்புத் திட்டங்கள் மூலம் வீடுகளைக் கட்டிய பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை

| ஆண்டு | சுட்டி | திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 2018 | சுட்டி 2: நிதியுதவித் திட்டங்கள் மூலம் வீடுகளைக் கட்டிய பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் | பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டம் | | |
| 2019 | | பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டம் | 8 | Rs.7,000,000 |
| 2020 | | பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் தலைவர்களுக்கு அதிகாரமளிக்கும் திட்டம் | 1 | Rs. 225,000 |

2019ம் ஆண்டுக்கான பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் இணையத்தளத்திலும் வழங்கப்பட்டிருந்தன.

| **ஆண்டு** | **பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை** | **பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் சதவீதம்** |
|---|---|---|
| 2019 | 1,436,000 | 25.20 |

85.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைகிறது. எனவே சுட்டி 2 ஐ"மோசமடையும் முன்னேற்றம்" என வகைப்படுத்த வேண்டும்.

2.2

நிதியுதவித் திட்டங்கள் மூலம் வீடுகளைக் கட்டிய பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை குறிப்பிடப்படாததால் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளத்தில் இருந்து பெறப்பட்ட தகவல்களை சுட்டி 2ன் முன்னேற்றத்தை மதிப்பிடப் பயன்படுத்த முடியாது. கூடுதலாக, வழங்கப்பட்ட தகவல்களும் 2019ம் ஆண்டுக்கு உரியவை என்பதால் சுட்டியை மதிப்பிடுவதைச் சிரமமாக்குகின்றன.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் இருந்து எந்தப் பயனுள்ள தகவல்களும் கிடைக்கவில்லை, நிதியமைச்சிடம் இருந்து எந்தத் தகவல்களும் கிடைக்கவில்லை, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாயக் கட்டமைப்பு இராஜாங்க அமைச்சிடம் இருந்து கிடைத்த தகவல்கள் காலக்கெடுவிற்குப் பின்னர் கிடைக்கப்பெற்றதால் அதைப் பயன்படுத்தமுடியாது. எனவே இந்தச் சுட்டி தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 3: பால் அடிப்படையில் தரவுகளைப் பிரித்துப் பேணுகின்ற அரசாங்க நிறுவனங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு<br>2) நிதியமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

3.1

தகவல் அறியும் கோரிக்கைக்கான பதிலில், பாலின அடிப்படையில் தரவைப் பிரித்துப் பராமரிக்கும் அமைச்சுக்களின் பட்டியலை நிதியமைச்சு வழங்கவில்லை. எனினும் சுட்டி 3 தொடர்பில் 2018ம் ஆண்டு ஒரு திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு சமர்ப்பித்த தகவலை நிதியமைச்சு தனது பதிலில் குறிப்பிட்டிருந்தது.

| சுட்டி | திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவைப் பராமிக்கும் பொது நிறுவனங்களின் எண்ணிக்கை | மனித வள தரவுதளத்திலிருந்து பாலின தகவல்களைப் பிரித்துப் பார்ப்பதற்கான திறனைப் பரிசோதித்தல் | 100% | திணைக்களத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன |

3.2

பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்களைச் சமர்ப்பிக்குமாறு 2019 மற்றும் 2020களில் அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்ட போதும் "எதிர்பார்த்ததைப் போன்று சமர்ப்பிக்கப்படவில்லை" என மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தகவல் கோரிக்கைக்கான பதிலில் குறிப்பிட்டிருந்தது. இதன் விளைவாக அனைத்து அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் பொருந்தக்கூடிய பாலின அடிப்படையிலான தரவுச் சேகரிப்பை உருவாக்கும் தேசியக் கொள்கை 2020ல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இது

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தச் சுட்டியை மதிப்பிடும்போது, பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்களைப் பராமரிக்கும் பொது நிறுவனங்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இருந்தால் பலவீனமான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது. 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தால் வலுவான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது.

3.1

சுட்டி 3 தொடர்பில் நடாத்தப்பட்ட திட்டத்தில் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவைப் பராமரிக்கும் பொதுநிறுவனங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடாததால் நிதியமைச்சு வழங்கிய தகவலை சுட்டி 3ன் மதிப்பீட்டுக்குப் பயன்படுத்த முடியாது. கூடுதலாக, வழங்கப்பட்ட தகவல்கள் 2019ம் ஆண்டுக்கு மட்டுமே உரியவை என்பதால் சுட்டியை மதிப்பிடுவதைச் சிரமமாக்குகின்றன.

3.2

இந்தச் சுட்டி தொடர்பிலான அறிக்கையிடல் மோசமாக உள்ளது என்பதை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு அறிந்திருக்கிறது என்பது அந்த அமைச்சு வழங்கிய தகவலில் தெளிவாவதுடன் இந்த ஆண்டு கிடைக்கப்பெற்ற தரவின் பற்றாக்குறை மூலமும் வெளிப்படையாகத் தெரிகிறது.

எனினும் 2020ல் பாலின அடிப்படையில் பிரிக்கப்பட்ட தரவுதளங்களைப் பராமரிக்கும் பொது அதிகாரசபைகளின் (முறையே 12 நிறுவனங்கள் மற்றும் 1 நிறுவனம்) பட்டியலை மகளிர்

தொடர்பான பயிற்சியை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் ஏற்பாடு செய்ய வேண்டியிருந்ததுடன் அதன் போது பாலின வரவு செலவுத்திட்டம் தொடர்பான கையேடு வழங்கப்படவிருந்தது.

மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சும் நிதியமைச்சும் வழங்கவில்லை.

சுட்டி 3 தொடர்பில் மேற்பார்வை செய்யும் இரண்டு அமைச்சுக்களும் பயன்படுத்தக்கூடிய தகவல்களை வழங்காததால் இந்தச் சுட்டியை தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்துகிறோம்.

| சுட்டி 4: தேசிய தொழிற்பயிற்சி (NVQ) சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதத்தை அதிகரிப்பதுடன் தொழில்நுட்ப தொழில்பயிற்சி துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் எண்ணிக்கையையும் அதிகரித்தல் | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு<br>2) நிதியமைச்சு<br>3) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு<br>4) திறன் விருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

4.1

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதம் மற்றும் தொழில்நுட்ப தொழில்பயிற்சித் துறையில் தொழில்புரிகின்ற பெண்களின் சதவீதம் தொடர்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தகவல் கோரிக்கைக்கான பதிலை இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு வழங்கியிருந்தது.

| | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|
| தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்ற பெண்களின் எண்ணிக்கை | 1,263 | 1,185 | 905* |
| தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழைப் பெற்ற பெண்களின்; % | 67.9 | 66.0 | 42.7 |
| தொழில்வாய்ப்பினைப் பெற்ற பெண்களின் எண்ணிக்கை | 275 | N/A | 83* |
| தொழில்வாய்ப்பினைப் பெற்ற பெண்களின்; % | 88.7 | N/A | 30.4* |

* தரவு சேகரிப்பு தொடர்ந்து நடைபெற்றுவருகிறது

4.2

சுட்டி 4 தொடர்பில் 2018ம் ஆண்டில் ஒரு திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு சமர்ப்பித்த தகவலையும் தகவல் கோரிக்கைக்கான பதிலில் நிதியமைச்சு வழங்கியிருந்தது.

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்த பி.செசு தொடர்பான மதிப்பீட்டில் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெறும் பெண்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 – 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

4.1

தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்கள் மற்றும் தொழில்வாய்ப்புகளைப் பெறுகின்ற பெண்களின் சதவீதம் தொடர்பில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு வழங்கிய தகவல்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு மட்டுமே உரியன. இதன் காரணமாக அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மட்டுமே முன்னேற்றத்தை மதிப்பிட முடியும்.

தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் சதவீதம் குறித்து இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு

| சுட்டி | திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்று தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சித் துறைகளில் வேலை வாய்ப்பு பெற்ற பெண்களின் சதவீதம் அதிகரிப்பு | 2016 மற்றும் 2018ம் ஆண்டுகளில் தேசிய தொழிற்பயிற்சி கற்கைக்கு சேர்க்கப்-பட்டவர்களில் பெண்களை அடையாளம் காணுதல் | 57% | திணைக்-களத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ஒதுக்-கீடுகளைப் பயன்படுத்தி திட்டங்கள் முன்னெடுக்-கப்பட்டன |

4.3

சுட்டி 4 தொடர்பில் 2018ம் ஆண்டில் ஒரு திட்டம் முன்னெடுக்கப்பட்டதாக தகவல் கோரிக்கைக்கான பதிலில் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தெரிவித்திருந்தது.

| சுட்டி | திட்டம் | பௌதீக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| தேசிய தொழிற்கல்வித் தகுதிகள் மற்றும் தரநிலைகளுடன் தொழில்நுட்பத் துறையில் பணிக்குச் சேரும் பெண்களின் சதவீதத்தில் அதிகரிப்பு | பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கான பணியாளர் பயிற்சி | 380 | N/A |

4.4

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் தொழிற்கல்வி கற்கைகளுக்கான மாணவர் சேர்ப்பு தொடர்பான தகவல்களை திறன் விருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சு தகவல் கோரிக்கைக்கான பதிலில் வழங்கியிருந்தது.

| 2018 | 2019 | 2020 |
|---|---|---|

வழங்கிய தகவல்களை சுட்டி 4ன் முன்னேற்றத்தை மதிப்பிடப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் 2020ம் ஆண்டுக்கான தரவு சேகரிப்பு தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. மேலும் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வித் துறைகளில் வேலை வாய்ப்பை பெறுகின்ற பெண்களின் எண்ணிக்கை தொடர்பில் இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு எந்தத் தகவல்களையும் வழங்கவில்லை. எனவே முன்னேற்றம் தொடர்பில் துல்லியமான மதிப்பீடு என்பது சாத்தியமற்றது.

4.2

தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களைக் குறிப்பிடாததால் நிதியமைச்சு வழங்கிய தகவலை மதிப்பீட்டுக்குப் பயன்படுத்த முடியாது. கூடுதலாக, வழங்கப்பட்ட தகவல்கள் 2018ம் ஆண்டுக்கு மட்டுமே உரியவை என்பதால் சுட்டியை மதிப்பிடுவதைச் சிரமமாக்குகின்றன.

4.3

தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களைப் பெற்ற பெண்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களைக் குறிப்பிடாததால் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு வழங்கிய தகவலை மதிப்பீட்டுக்குப் பயன்படுத்த முடியாது. மேலும் இந்தத் திட்டம் சுட்டி 3 உடன் எவ்வாறு நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது என்பது குறித்தும் தெளிவில்லை. கூடுதலாக, வழங்கப்பட்ட தகவல்கள் 2018ம் ஆண்டுக்கு

| ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|---|---|
| 49,194 | 73,315 | 49,903 | 74,828 | 31,244 | 49,065 |

தொழிற்கல்வி பயிற்சியை முடித்த மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை அமைச்சு வழங்கியது.

| 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|
| ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| 39,705 | 54,704 | 41,252 | 58,245 | 25,414 | 35,594 |

பயிற்சியை முடித்தவர்களில் பலரும் தங்கள் வேலை வாய்ப்பு தொடர்பான நிலை குறித்த கூடுதல் தகவல்களை வழங்காததால் தொழிற்கல்வி பயிற்சியை நிறைவுசெய்து வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொண்ட பெண்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைத் தர முடியவில்லை என அமைச்சு மேலும் தெரிவித்திருந்தது.

மட்டுமே உரியவை என்பதால் சுட்டியை மதிப்பிடுவதைச் சிரமமாக்குகின்றன.

4.4

கடந்த ஆண்டுடன் (2020) ஒப்பிடுகையில் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கைக்கான பதில் கிடைத்ததது. எனினும் இது தகவல் கோரிக்கைக்கான பதில்களைப் பெறுவதற்கு இறுதித் திகதியாக மதிப்பீட்டுக் குழு தீர்மானித்திருந்த ஜனவரி 31, 2022க்குப் பின்னரே கிடைத்தது (தகவல் கோரிக்கை ஒக்டோபர் 18, 2021 தாக்கல் செய்யப்பட்டது). ஆகவே இந்தச் சுட்டியின் முன்னேற்றத்தை வகைப்படுத்த இந்தத் தகவல் பயன்படுத்தப்படாது. இந்தத் தகவலைப் பயன்படுத்தினாலும் கூட கிடைத்த வேறு தகவல்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட வகைப்பாட்டில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஏனெனில் இந்தப் புள்ளிவிபரங்கள் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழுக்கான பயிற்சியில் சேர்ந்தவர்கள் தொடர்பானதா என்பதை அமைச்சு தெளிவுபடுத்தவில்லை. மேலும் சான்றிதழ்களைப் பெற்று வேலை வாய்ப்பைப் பெற்றவர்களின் எண்ணிக்கை குறித்தும் தகவல் இல்லை. ஆகவே சுட்டியின் முன்னேற்றத்தைப் பகுதியளவில் மட்டுமே மதிப்பிடப்பட முடியும் (இந்த எண்ணிக்கைகள் தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்களுடன் தொடர்புடையவை என்ற அனுமானத்தின் அடிப்படையில்).

பயன்படுத்தக்கூடிய அல்லது போதுமான தகவல்களை நிதியமைச்சு மகளிர் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சு இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு ஆகியவை வழங்காததால் இந்தச் சுட்டி தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 5: எஸ்எம்ஈ கடன்கள்/மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடுகின்ற பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **மோசமான முன்னேற்றம்**[21] | **மூலங்கள்:**<br>1) கைத்தொழில் அமைச்சு<br>2) நிதியமைச்சு<br>3) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

5.1

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் எஸ்எம்ஈ கடன்கள்/ மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கையை கைத்தொழில் அமைச்சு தகவல் அறியும் கோரிக்கைக்கான பதிலில் வழங்கியிருந்தது.

| 2018 | 2019 | 2020 |
|---|---|---|
| 11 | 77 | 40 |

5.2

சுட்டி 5 தொடர்பில் சப்ரகமுவ மாகாண சபையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 2018ம் ஆண்டுக்கான தகவல்களை தகவல் கோரிக்கைக்கான பதிலில் நிதியமைச்சு வழங்கியிருந்தது.

| சுட்டி | எண்ணிக்கை |
|---|---|
| எஸ்எம்ஈ கடன்கள்/ மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை | 1,538 |

5.3

RTI கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018 - 2019 காலப்பகுதியில் குறித்த பி.செசு தொடர்பாக 2 திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இவை வடக்கு, கிழக்கில் பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கையை (CEDAW) நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும், இலங்கை மகளிர் பணியகத்தின் கீழான திட்டங்களுக்காகவும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுக்கு ரூ.70.39 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது என்ற தகவலும் வழங்கப்பட்டுள்ளது.

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தச் சுட்டியை மதிப்பிடும்போது, எஸ்எம்ஈ கடன்கள்/மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இருந்தால் பலவீனமான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது. 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தால் வலுவான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது.

5.1

2019இலிருந்து 2020ல் எஸ்எம்ஈ கடன்கள்/மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை 48 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதை கைத்தொழில் அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் காட்டுகின்றன.

5.2

நிதியமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் சப்ரகமுவ மாகாணத்திற்கு மட்டுமே

2020ல் இந்தத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பிலான தகவல்களை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு அதன் வலைதளத்தில் வழங்கியிருந்தது. CEDAW தொடர்பிலான ஒரு திட்டம் 2020ம் ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்டதுடன் இதற்கு ரூ.5.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.

உரியது என்பதால் இந்தச் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்த முடியாது. கூடுதலாக, வழங்கப்பட்ட தகவல்கள் 2018ம் ஆண்டுக்கு மட்டுமே உரியவை என்பதால் சுட்டியை மதிப்பிடுவதைச் சிரமமாக்குகின்றன.

5.3

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் மொத்த செலவினங்களின் விபரங்களை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல்கள் வழங்கவில்லை. எனினும் 2020ல் சுட்டி 5 தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் மொத்தச் செலவினம் ரூ.5.3 மில்லியன் என இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் குறிப்பிடுகின்றன.

எஸ்எம்ஈ கடன்கள்/ மானியங்களைப் பயன்படுத்தி நிலையான தொழில்முயற்சிகளில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை 2019இலிருந்து 2020ல் குறைந்துள்ளதால் மோசமான முன்னேற்றம் என இந்தச் சுட்டி வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 6: வெளிநாட்டிலிருந்து திரும்புகிற பெண் தொழிலாளர்கள் மற்றும் ஆற்றலுடைய வெளிநாட்டு தொழில் புரிகின்ற பெண்களின் தொழில் வாய்ப்பினை இலக்காகக் கொண்ட தேசிய கொள்கைகள் மற்றும் கருத்திட்டங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **முன்னேற்றம் இல்லை** | **மூலங்கள்:**<br>வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு<br>2) நிதியமைச்சு<br>3) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

6.1

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் சுட்டி 6 தொடர்பில் 5 திட்டங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சு தகவல் கோரிக்கைக்கான பதிலில் பட்டியலிட்டிருந்தது.

1. குடும்ப பின்னணி அறிக்கைகளை வழங்குதல்
2. "ஷ்ரமிக்கா சுரகும" திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
3. குடும்ப அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்துதலும்
4. விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துதல்
5. பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறை (SGBV) தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

| **திட்டம்** | **2018** | | **2019** | | **2020** | |
|---|---|---|---|---|---|---|
| | **ஆ** | **பெ** | **ஆ** | **பெ** | **ஆ** | **பெ** |
| குடும்பப் பின்னணி அறிக்கைகளை வழங்குதல் (FBR)<br><br>பயனாளர்களின் எண்ணிக்கை | - | 30,654 | - | 33,064 | - | 7,337 |
| ஷ்ரமிக்கா சுரகும திட்டத்திற்கான பதிவு<br><br>பயனாளர்களின் எண்ணிக்கை | 4,412 | 21,244 | 5,435 | 20,799 | 3,142 | 6,827 |

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டியை மதிப்பிட கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறை ஆகியவற்றில் ஏற்படும் ஒரேயொரு மாற்றம் பலவீனமான முன்னேற்றமாகக் கருதப்படும். அதற்கு மேலதிகமான மாற்றங்கள் வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

6.1

சுட்டி 6 தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் குறித்த விபரங்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சு வழங்கியது. எனினும் குடும்பப் பின்னணி அறிக்கைகளை வழங்குதல் எனும் ஒரே ஒரு திட்டம் மாத்திரமே சுட்டி 6 உடன் தொடர்புடையது. இது முற்றுமுழுதாக வெளிநாட்டுக்குச் செல்லும் பெண்களை இலக்காகக் கொண்டது. இந்தத் திட்டம் 2018, 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் கூடுதலாக வேறு எந்த திட்டங்களோ செயல்திட்டங்க ளோநடைமுறைப்படுத்தப்பட

| திட்டம் | 2018 | | 2019 | | 2020 | |
|---|---|---|---|---|---|---|
| | ஆ | பெ | ஆ | பெ | ஆ | பெ |
| குடும்ப அபிவிருத்தி திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்-படுத்துதலும்<br><br>பயனாளர்களின் எண்ணிக்கை | 957 | 5,597 | 1,250 | 5,887 | 639 | 1,805 |
| பராமரிப்புத் திட்டங்களை உருவாக்குதலும் நடைமுறைப்-படுத்துதலும்<br><br>சிறுவர்களின் எண்ணிக்கை | 74 | 761 | 62 | 1,005 | 53 | 303 |
| விழிப்புணர்வுத் திட்டங்கள்<br><br>திட்டங்களின் எண்ணிக்கை | 5,519 | 6,903 | 2,215 | | | |
| பாதுகாப்பாக வெளிநாடு செல்லுவதற்கான விழிப்புணர்வு, HT, போதைப் பொருள் விழிப்புணர்வு போன்றவை.<br><br>திட்டங்களின் எண்ணிக்கை | 932 | - | - | | | |
| SGBV தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்<br><br>செலவினம் | 3,529,727 | 3,401,125 | ஆண்டிற்கான ஒதுக்கீடு கிடைக்கவில்லை | | | |

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கான முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான உள்ளக அளவீடுகளையும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சு பட்டியலிட்டிருந்தது:

வில்லை.

குடும்பப் பின்னணி அறிக்கைகளை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பெண் பயனாளர்களின் எண்ணிக்கை 2020ம் ஆண்டில் 78 சதவீதத்தால் குறைந்துள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் அமைச்சினால் எந்தவொரு கூடுதல் திட்டங்களோ தேசியக் கொள்கைகளோ வழங்கப்படவில்லை, இந்தச் சுட்டியின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் குறித்து நிதியமைச்சோ மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சோ எந்தத் தகவல்களையும் வழங்கவில்லை. எனவே இந்தச் சுட்டி எந்த முன்னேற்றமும் இல்லை என வகைப்படுத்தப்படுகிறது.

2. தனிப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மாதாந்த முன்னேற்ற அறிக்கை

3. சுருக்கமான முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்

4. பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயனாளர்களின் வீடுகளுக்கு விஜயம் செய்தல்

5. முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கான சந்திப்புகள்

6. குடும்ப அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பராமரிப்பு திட்டங்களை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சரவை உத்தியோகத்தர்கள் கண்காணித்தலும் நடைமுறைப்படுத்துதலும்

| சுட்டி 7: தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையை கொள்கை தலையீடுகள் மூலம் அதிகரித்தல் | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு<br>2) நிதியமைச்சு<br>3) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

7.1

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் பணிக்குச் சேர்க்கப்பட்ட பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தொடர்பில் ஏழு மூலங்களிலிருந்து அமைச்சுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பொது நிர்வாகம், மகாாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தகவல் கோரிக்கைக்குப் பதிலளிதிருந்தது.

| **பெண்** | **உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை** | | |
|---|---|---|---|
| | **31.12.2018 அன்று** | **31.12.2019 அன்று** | **31.12.2020 அன்று** |
| இலங்கை நிர்வாக சேவை | ஆண்டு வாரியாக அவர்களிடம் தகவல்கள் இல்லை. ஆனால் 30.09.2021 அன்று நிர்வாகச் சேவைகளில் பெண் உத்தியோகத்-தர்களின் எண்ணிக்கை 1,439 | | |
| இலங்கை பொறியியல் சேவை | 337 | 344 | 345 |
| இலங்கை விஞ்ஞான சேவை | 208 | 217 | 263 |
| இலங்கை கட்டிட நிர்மாண சேவை | N/A | N/A | 31 |

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தச் சுட்டியை மதிப்பிடும்போது, தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை இருந்தால் பலவீனமான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது. 10 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்தால் வலுவான முன்னேற்றம் என மதிப்பிடப்படுகிறது.

7.1

ஏழு சேவைகளிலும் பணிக்குச் சேர்க்கப்பட்ட பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையானது “தீர்மானம் எடுக்கும் பதவிகளுக்கானதா” அல்லது பொதுவாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பெண் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையா என்பது பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் வழங்கப்பட்ட தகவல்களில் குறிப்பிடப்படவில்லை. மேலும் கொள்கை தலையீடுகளின் விளைவாக இந்த ஆட்சேர்ப்புகள் முன்னெடுக்கப்பட்டனவா என்பதும் தெளிவில்லை.

7.2 நிதியமைச்சு வழங்கிய

| பெண் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 31.12.2018 அன்று | 31.12.2019 அன்று | 31.12.2020 அன்று |
| இலங்கை திட்டமிடல் சேவை | திட்டமிடல் சேவையில் 31.12.2020 அன்று பெண் உத்தியோகத்-தர்களின் எண்ணிக்கை 918 | | |
| இலங்கை கணக்காளர்கள் சேவை | 716 | 877 | 858 |
| இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பச் சேவை (தரம்; I & II) | 130 | 151 | 150 |

மேலும், அமைச்சின் கீழ்வரும் ஒருங்கிணைந்த சேவைகளுக்கான அகில இலங்கைச் சேவைகள் மற்றும் SLICT சேவைகளுக்கான ஆட்சேர்ப்பில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சமமான வாய்ப்பு வழங்கப்படுவதாகவும் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

7.2

2018ம் ஆண்டுக்கான சுட்டி 7 தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்து பொது நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு சமர்ப்பித்த தகவல்களை தகவல் அறியும் கோரிக்கைக்கான பதிலில் நிதியமைச்சு வழங்கியிருந்தது. "2018 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்" எனும் தலைப்பில் பொது நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சின் கீழ் இந்தத் தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. அவை:

| அகில இலங்கைச் சேவை | பெண் உத்தியோகத்-தர்களின் எண்ணிக்கை | ஆண் உத்தியோகத்-தர்களின் எண்ணிக்கை | பெண் உத்தியோகத்-தர்களின் சதவீதம் |
|---|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவை | 1,235 | 1,181 | 51.11 |
| இலங்கை திட்டமிடல் சேவை | 396 | 376 | 51.29 |
| இலங்கை கணக்காளர்கள் சேவை | 878 | 834 | 51.28 |

தகவல்களிலும் இந்த ஆட்சேர்ப்புகள் தீர்மானம் எடுக்கும் பதவிகளுக்கானதா என்பது குறிப்பிடவில்லை. கூடுதலாக, வழங்கப்பட்ட தகவல்கள் 2018ம் ஆண்டுக்கு மட்டுமே உரியவை என்பதால் சுட்டியை மதிப்பிடுவதைச் சிரமமாக்குகின்றன.

வழங்கப்பட்ட தகவல்கள் "2018 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்" என தலைப்பிடப்பட்டுள்ளதால், இந்த எண்ணிக்கைகள் சுட்டியை அடைவதற்கான இலக்குகளா அல்லது இவை 2018ம் ஆண்டில் உண்மையில் பணிக்குச் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையா என்பதும் தெளிவில்லை.

7.3

2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் கொள்கை தலையீடுகள் காரணமாக தீர்மானம் எடுக்கும் தகைமையிலுள்ள பெண்களின் எண்ணிக்கை தொடர்பில் தனியான விபரத்தையோ 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் இந்தத் திட்டங்களுக்கான மொத்தச் செலவினம் குறித்த விபரங்களையோ மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு வழங்கவில்லை.

கூடுதலாக, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதிலானது அதற்கு முந்தைய ஆண்டில் (2021) கிடைத்த பதிலின் நகலாக இருந்தது. இதன் விளைவாக 2020ம் ஆண்டில் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தப் புதிய தகவல்களும்

| | | | |
|---|---|---|---|
| இலங்கை விஞ்ஞான மற்றும் கட்டிட நிர்மாண சேவை | 251 | 195 | 56.28 |
| இலங்கை பொறியியல் சேவை | 342 | 901 | 27.51 |

7.3

2018/19ல் சுட்டி 7 தொடர்பில் இரண்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தகவல் கோரிக்கைக்குப் பதிலளித்திருந்தது. இந்தத் தகவல்கள் நிதியமைச்சின் பதிலிலும் வழங்கப்பட்டிருந்தன. அந்தத் திட்டங்கள்:

• நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

• மாகாண வரவு செலவுத்திட்டங்களுக்கு 25 சதவீத ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துதல்

இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2018/19ல் மொத்தம் ரூ.4.04 மில்லியன் செலவிடப்பட்டதாகவும் அந்தப் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கிடைக்கவில்லை.

ஆகவே, கிடைக்கப்பெற்ற தகவல்கள் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாகவும் முழுமையானதாகவும் இல்லாததால், இந்தச் சுட்டி தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 8: பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) நிதியமைச்சு<br>2) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

8.1

சுட்டி 8 தொடர்பில் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு முன்னெடுத்த திட்டங்கள் தொடர்பான தகவல்களை நிதியமைச்சு தகவல் கோரிக்கைக்குப் பதிலாக வழங்கியிருந்தது.

| சுட்டி | திட்டம் | பௌதிக முன்னேற்றம் | நிதி முன்னேற்றம் |
|---|---|---|---|
| பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை | பகல் நேரப் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் சேவா வனிதா அலகுகளை உருவாக்குதல், பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்ளுதல், நூலக வசதிகள் மற்றும் விளையாட்டு வசதிகளை வழங்குதல் | 100% | திணைக்களத்திற்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன |

இலங்கை துறைமுக அதிகார சபையினால் பகல் நேர பராமரிப்பு நிலையம் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களையும் நிதியமைச்சு வழங்கியிருந்தது:

| | |
|---|---|
| **சிறுவர்களின் எண்ணிக்கை** | 26 |

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்த பி.செசு தொடர்பான மதிப்பீட்டில் பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 – 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

8.1

2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளில் காணி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சு முன்னெடுத்த திட்டங்களின் விபரங்களை நிதியமைச்சு வழங்கவில்லை. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட தகவல்கள் எந்தக் காலப்பகுதிக்கு உரியன என்பதும் குறிப்பிடப்படவில்லை.

8.2

2018, 2019 அல்லது 2020ம் ஆண்டுகளில் இந்தத் திட்டங்களின் முன்னேற்றங்களின் விபரத்தை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு

| | |
|---|---|
| **பகல் நேரப் பராமரிப்பு நிலையத்தில் சிறுவர்களைப் பராமரிப்பிற்காகச் சேர்த்துள்ள பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை** | 7 |
| **வருடாந்தச் செலவினம் (ரூ.)** | 2,066,000 |

8.2

2018/19ல் சுட்டி 8 தொடர்பில் இரண்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தகவல் கோரிக்கைக்குப் பதிலளித்திருந்தது. இந்தத் தகவல்கள் நிதியமைச்சின் பதிலிலும் வழங்கப்பட்டிருந்தன. அந்தத் திட்டங்கள்:

• அமைச்சரவை மட்டத்தில் பாலின சமத்துவ முன்முயற்சித் திட்டங்களை உருவாக்குதல்

• பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களின் நிர்மாணமும் அபிவிருத்தியும்

இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2018/19ல் மொத்தம் ரூ.92.882 மில்லியன் செலவிடப்பட்டதாகவும் அந்தப் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

வழங்கவில்லை. கூடுதலாக, இந்தத் திட்டங்களுக்கான மொத்தச் செலவினம் குறித்த விபரங்களையும் அமைச்சு வழங்கவில்லை.

கூடுதலாக, நிதியமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில்களானது அதற்கு முந்தைய ஆண்டில் (2021) கிடைத்த பதில்களின் நகலாக இருந்தது. இதன் விளைவாக 2020ம் ஆண்டில் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தப் புதிய தகவல்களும் கிடைக்கவில்லை.

ஆகவே, கிடைக்கப்பெற்ற தகவல்கள் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாகவும் முழுமையானதாகவும் இல்லாததால், பால்நிலை நட்பு தொழில் சூழல் மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை காலப்போக்கில் மாறியுள்ளதா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.

எனவே இந்தச் சுட்டி தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 9: அனர்த்தங்களின் போது மீட்புப்பணி, நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பின் போது பால்நிலை தொடர்பான கவனத்தினை உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறன் மிக்கதாக செயற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) நிதியமைச்சு<br>2) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு<br>3) தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

9.3

அனர்த்த முகாமைத்துவத்தின்போது பால்நிலை தொடர்பான கவனத்தை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் தொடர்பில் தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு தகவல் கோரிக்கைக்குப் பதிலளித்திருந்தது. பால்நிலை கவனத்தை உறுதிப்படுத்துவது தொடர்பில் அமைச்சு பின்பற்றும் ஏற்கனவேயுள்ள மூன்று கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகள் குறித்து தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன:

• அனர்த்த முகாமைத்வதுவக் கொள்கைக் கட்டமைப்பு 2013

• 2005ம் ஆண்டின் 13ம் இல. அனர்தத முகாமைத்துவச் சட்டம்

• "நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" (ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞாபனம்)

சுட்டி 9 ஐ நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கான கோரிக்கை தொடர்பில் "அனர்த்த முகாமைத்துவத்தில் அவ்வாறான தனிப்பட்ட கொள்கைகள் இல்லை" என பதிலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டியை மதிப்பிட கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறை ஆகியவற்றில் ஏற்படும் ஒரேயொரு மாற்றம் பலவீனமான முன்னேற்றமாகக் கருதப்படும். அதற்கு மேலதிகமான மாற்றங்கள் வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

9.3

இராஜாங்க அமைச்சினால் பின்பற்றப்படும் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் பட்டியலை தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு வழங்கியிருந்தது. எனினும் இவை அனர்த்த முகாமைத்துவத்தின் போது பாலினப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதில் மட்டும் மறைமுகமாகப் பங்களிக்கிறது. கூடுதலாக, இந்தக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதி தொடர்பான தகவல்களை இராஜாங்க அமைச்சு பதிலில் வழங்காததால், சுட்டியின் முன்னேற்றத்தை 2018, 2019, 2020 ஆகிய ஆண்டுகளுக்கு மதிப்பிடுவதைக் கடினமாக்குகிறது.

மேலும் சுட்டி 9 ஐ நேரடியாக அடைவதற்கான கொள்கைகளையோ வழிகாட்டுதல்களையோ நடைமுறைப்படுத்தவில்லை என்பது தேசியப் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு தெளிவாக்கியுள்ளது.

இந்தச் சுட்டியின் முன்னேற்றம் தொடர்பில் மேற்பார்வை செய்யும் அமைப்புகளான நிதியமைச்சோ மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சோ எந்தவிதத் தகவல்களையும் வழங்கவில்லை.

ஆகவே கிடைக்கப்பெற்ற தகவல்கள் இந்தச் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் போதுமானதாகவும் முழுமையானதாகவும் இல்லை.

அனர்த்த முகாமைத்துவத்தின் போது பாலினப் பிரச்சினைகளைக் கவனத்தில் கொள்வதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் எண்ணிக்கை காலப்போக்கில் கூடியுள்ளதா குறைந்துள்ளதா என்பதைத் தீர்மானிப்பது சாத்தியமில்லை.

எனவே இந்தச் சுட்டியானது தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 10: மகளிர் மற்றும் சிறுவர் தொடர்பான விவகாரங்களை நேர்த்தியாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் கையாளுகின்ற ஆற்றலுடைய பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு<br>2) நிதியமைச்சு<br>3) பொது பாதுகாப்பு அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

10.1

இந்தச் சுட்டி தொடர்பில் 2018/19 ஆண்டுகளில் இராஜாங்க அமைச்சினால் இரண்டு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தகவல் கோரிக்கைக்கான பதிலில் தெரிவித்திருந்தது. இந்தத் தகவல்களை நிதியமைச்சும் தகவல் கோரிக்கைக்கான பதிலில் வழங்கியிருந்தது. அந்தத் திட்டங்கள்:

- சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தை உருவாக்குதல்
- சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அலகுகளை உருவாக்குதல்

2018/19ல் இந்தத் திட்டங்களுக்காக ரூ.38.12 மில்லியன் செலவிடப்பட்டதாகவும் அந்தப் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளத்தில் 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளுக்கான முன்னேற்ற அறிக்கைகளில் சுட்டி 10 தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை:

| | **பௌதீக முன்னேற்றம்** | | **நிதி முன்னேற்றம் (ரூ. மில்லியன்)** | |
|---|---|---|---|---|
| | **2019** | **2020** | **2019** | **2020** |
| **சிறுவர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி அலகுகளை உருவாக்குதல்** | 100% | - | 3.709 | - |
| **சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு பொலிஸ் பணியகங்களை அமைத்தல்** | 95% | 60% | 19.21 | 7.286 |

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்த பி.செசு தொடர்பான மதிப்பீட்டில் பொலிஸ் நிலையங்களிலுள்ள மகளிர் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கையின் வருடாந்த அதிகரிப்பு 0 – 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

10.1

பொலிஸ் நிலையங்களில் எத்தனை மகளிர் மற்றும் சிறுவர் அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன என்பதற்கான எண்ணிக்கையையோ 2018 மற்றும் 2019ம் ஆண்டுகளில் இந்தத் திட்டங்களுக்கான மொத்தச் செலவினத்தையோ மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு வழங்கவில்லை.

கூடுதலாக, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதிலானது அதற்கு முந்தைய ஆண்டில் (2021) கிடைத்த பதிலின் நகலாக இருந்தது. இதன் விளைவாக 2020ம் ஆண்டில் முன்னேற்றத்தை

10.3

பொதுப் பாதுகாப்பு அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கைக்கு எந்தவிதப் பதிலும் கிடைக்கவில்லை. இலங்கை காவல்துறைக்கு அனுப்பப்பட்ட தகவல் அறியும் கோரிக்கை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 5 (1)(h)(i)ன் கீழ் நிராகரிக்கப்பட்டது. இந்தக் கோரிக்கை பொதுப் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து இலங்கை காவல்துறைக்கு அனுப்பப்பட்டது.

மதிப்பிடுவதற்கு எந்தப் புதிய தகவல்களும் கிடைக்கவில்லை.

மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளத்தில் 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளுக்கான முன்னேற்ற அறிக்கைகளில் கிடைக்கும் தகவல்கள் நாடு முழுவதும் சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகத்தைத் தடுக்க அமைக்கப்பட்ட பொலிஸ் பணியகங்களின் எண்ணிக்கை விபரங்களை வழங்கவில்லை. 2019 மற்றும் 2020களில் தனித்தனியாக எத்தனை சிறுவர் மற்றும் பெண்கள் பணியகங்கள் அமைக்கப்பட்டன என்பதை பௌதீக முன்னேற்ற அறிக்கையும் குறிப்பிடவில்லை.

ஆகவே, 2019 முதல் 2020க்குள் பொலிஸ் நிலையங்களில் உருவாக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர் பணியக அலகுகளின் எண்ணிக்கை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாகவும் முழுமையானதாகவும் இருக்கவில்லை.

எனவே இந்தச் சுட்டி தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 11: திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு<br>2) நிதியமைச்சு<br>3) நீதியமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

11.1

இந்தச் சுட்டி தொடர்பில் 2018/19 ஆண்டுகளில் இராஜாங்க அமைச்சினால் 17 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதாக மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு தகவல் கோரிக்கைக்கான பதிலில் தெரிவித்திருந்தது. இந்தத் தகவல்களை நிதியமைச்சும் தகவல் கோரிக்கைக்கான பதிலில் வழங்கியிருந்தது. அந்தத் திட்டங்கள்:

1. கணவனை இழந்தவர்கள் மற்றும் குடும்பத்தலைவிகளுக்கான செயல்பாட்டுத் திட்டம்
2. பாலின முன்முயற்சி மற்றும் வரவு செலவுத்திட்டம் தொடர்பான கையேடு
3. பெண்கள் காப்பகத்தைப் பராமரிப்பது தொடர்பான வழிகாட்டுதல்கள்
4. இளவயதுத் திருமணங்கள் மற்றும் கர்ப்பங்களைக் குறைப்பதற்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்தல்
5. தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையைத் தயாரித்தல்
6. குழந்தைப் பருவ பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான தேசியக் கொள்கை
7. இலங்கையில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான வழிகாட்டுதல்களும் நடத்தை விதிமுறைகளும்
8. குழந்தைகள் பராமரிப்புத் தொடர்பான கற்கைக்கான பயிற்சியாளர் வழிகாட்டி
9. அவசரகால அனர்த்தங்களின்போது உளவியல் முதலுதவி தொடர்பான கையேடு
10. இலங்கையில் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டுதல்கள்
11. மாற்றுப் பராமரிப்பு தொடர்பிலான தேசியக்கொள்கை

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்தப் பிரதான செயலாற்றுகை சுட்டியை மதிப்பிட கொள்கை/சட்டம்/ஒழுங்குமுறை ஆகியவற்றில் ஏற்படும் ஒரேயொரு மாற்றம் பலவீனமான முன்னேற்றமாகக் கருதப்படும். அதற்கு மேலதிகமான மாற்றங்கள் வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

11.1

திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை எத்தனை என்பது குறித்த தகவல்களை மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு வழங்கவில்லை. மேலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இந்தத் திட்டங்களுக்காகத் தனித்தனியாகச் செலவிடப்பட்ட மொத்தச் செலவினத்தையும் வழங்கவில்லை.

கூடுதலாக, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதிலானது அதற்கு முந்தைய

12. வயதுக் குழுக்களுக்கான கையேடு

13. மகளிர் ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டமூலங்களைத் தயாரித்தல்

14. குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் கண்காணிப்பதற்கான செயல் திட்டம்

15. பிறப்புச் சான்றிதழில் ஆறாவது பிரிவைத் திருத்துதல்

16. பெண்கள் தொடர்பில் ஊடகக் கொள்கைகளை உருவாக்குதல்

17. கொள்கைப் பிரசுரங்களைத் தயாரித்தல்

2018/19ல் இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ரூ.12.3 மில்லியன் செலவிடப்பட்டதாகவும் அந்தப் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

11.2

நிதியமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கை மூலம் எந்தத் தகவல்களும் பெறப்படவில்லை.

11.3

நீதியமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் கோரிக்கை மூலம் எந்தத் தகவல்களும் பெறப்படவில்லை.

ஆண்டில் (2021) கிடைத்த பதிலின் நகலாக இருந்தது. இதன் விளைவாக 2020ம் ஆண்டில் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தப் புதிய தகவல்களும் கிடைக்கவில்லை.

ஆகவே, 2019 முதல் 2020க்குள் திருத்தப்பட்ட, சட்டமாக்கப்பட்ட மற்றும்/அல்லது செயற்படுத்தப்பட்ட பால் பாகுபாடு காணப்படுகின்ற சட்டங்கள, கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் எண்ணிக்கை தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல்கள் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிட போதுமானதாகவும் முழுமையானதாகவும் இருக்கவில்லை. எனவே இந்தச் சுட்டி தகவல் வெளிப்படுத்தப்படவில்லை என வகைப்படுத்தப்படுகிறது.

| சுட்டி 12: பாலியல் மற்றும் பால் அடிப்படை வன்முறைகளை இல்லாதொழிக்கின்ற பல்துறை தேசிய செயற்பாட்டுத் திட்டத்தினை நிறைவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை | | |
|---|---|---|
| **முன்னேற்றத்தின் வகைப்பாடு** | **தகவல் வெளிப்படுத்தப்படவில்லை** | **மூலங்கள்:**<br>1) நிதியமைச்சு<br>2) மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு |

## பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் சுருக்கம்

12.1

இந்தச் சுட்டி தொடர்பில் பொது நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சு சமர்ப்பித்த தகவல்களை நிதியமைச்சு தகவல் கோரிக்கைக்கான பதிலில் வழங்கியிருந்தது. "இலங்கையில் பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளைக் கவனத்தில் கொள்வதற்கான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் தேசிய செயல்திட்டத்தின் (2016-2020)" சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அமைச்சின் 2019 வருடாந்த செயல் திட்டம் தொடர்பான விபரங்கள் அந்தத் தகவல்களில் அடங்கியிருந்தன. இந்த நடவடிக்கைகளின் சுருக்கம் மற்றும் அவற்றுக்காக ஒதுக்கப்பட்ட தொகை என்பன கீழே தரப்பட்டுள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்த 2019ம் ஆண்டில் ரூ.10 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

| முக்கிய செயல்பாடு | கால அவகாசம் | வரவு செலவுத் திட்டம் (ரூ.) |
|---|---|---|
| நிவாரணம் மற்றும் மறுவாழ்வு குறித்த குறிப்பிட்ட நடவடிக்கைகளுடன் அனர்த்த முகாமைத்துவத்தில் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்த ஏற்கனவே உள்ள வழிமுறைகளை மதிப்பாய்வு செய்தல் | 2019 இறுதி | 0.5 மில்லியன் |
| பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தடுக்க கிராமப்புற மட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ உப குழுக்களை வலுப்படுத்துதல் | ஜனவரி - மார்ச் 2019 | 1.5 மில்லியன் |
| மீட்பு நடவடிக்கைகளின் போது பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளிலிருந்து சிறுவர்களையும் வளரிளம் பருவத்தினரையும் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அமைத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புக்களுக்கு பொறுப்புக்களை வழங்குதல் | ஜனவரி – மே 2019 | 1.5 மில்லியன் |

## பெறப்பட்ட தகவல்கள் தொடர்பான கருத்துகள்

இந்த பி.செசு தொடர்பான மதிப்பீட்டில் ஒதுக்கீட்டுத் தொகையின் வருடாந்த அதிகரிப்பு 0 – 10% என்றால் பலவீனமான முன்னேற்றமாக மதிப்பிடப்படும். 10% விட கூடிய அதிகரிப்பே வலுவான முன்னேற்றமாகக் கருதப்படும்.

12.1

2018ம் ஆண்டுக்கு அல்லது 2020ம் ஆண்டுக்கு பொது நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கிராமியப் பொருளாதார விவகார அமைச்சு ஒதுக்கீடு செய்த தொகை தொடர்பான மேலதிக விவரங்களை நிதியமைச்சு வழங்கவில்லை.

12.2

2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இந்தத் திட்டங்களுக்காகத் தனித்தனியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையையும் மகளிர் மற்றும்

| முக்கிய செயல்பாடு | கால அவகாசம் | வரவு செலவுத் திட்டம் (ரூ.) |
|---|---|---|
| காவல்துறை, நன்னடத்தை, சுகாதாரம் போன்ற சிவில் பாதுகாப்பு முகவரகங்களுக்கான சேவை தொடர்ச்சித் திட்டத்தை உருவாக்குதல் | ஜனவரி - ஜுன் 2019 | 2.5 மில்லியன் |
| பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இனப்பெருக்க சுகாதார சேவைகளை வழங்குதல் | ஜனவரி - ஜுன் 2019 | 4.0 மில்லியன் |

12.2

RTI கோரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில், மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2018/2019 காலப்பகுதியில் குறித்த 12 பி.செசு தொடர்பாக 25 திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. இந்தத் தகவல்களை நிதியமைச்சும் தகவல் கோரிக்கைக்கான பதிலில் வழங்கியிருந்தது. அந்தத் திட்டங்கள்:

1. பாலின சமத்துவம் மற்றும் பால் அடிப்படையிலான வன்முறைகளைக் குறைப்பதற்கான திட்டங்கள்
2. சிறுவர் துஷ்பிரயோகத்தைக் குறைப்பதற்காக தேசிய ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு செயல்திட்டம்
3. சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகள்
4. பால் அடிப்படையிலான வன்முறைகளைத் தடுப்பது மற்றும் அதற்குப் பதிலளிப்பதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு பொறிமுறைகளை வலுப்படுத்துதல்
5. பெண்கள் காப்பகங்களை பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்கள்.
6. இலங்கை மகளிர் பணியகத்தின் செயல்திட்டங்கள்
7. பாடசாலை பாடத்திட்டத்தில் வாழ்க்கைத் திறன் விருத்தி மற்றும் பாலியல் கல்வியை இணைத்தல்
8. பாடசாலையில் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை நிறுவுதல் மற்றும் பலப்படுத்துதல்
9. 'ஜன பவுற' சிறுவர் பாதுகாப்பு திட்டங்கள்
10. பெருந்தோட்டத் துறை சார் சிறுவர்களையும் சமூக உறவுகளையும் பாதுகாத்தல்
11. கரையோரப் பிரதேசத்தில் உளவியல் மற்றும் சமூக ரீதியான தலையீடுகளை மேற்கொள்ளல்

சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு வழங்கவில்லை.

கூடுதலாக, நிதியமைச்சு, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஆகியவற்றிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில்களானது அதற்கு முந்தைய ஆண்டில் (2021) கிடைத்த பதிலின் நகலாக இருந்தது. இதன் விளைவாக 2020ம் ஆண்டில் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கு எந்தப் புதிய தகவல்களும் கிடைக்கவில்லை.

இந்தச் சுட்டியுடன் தொடர்புடைய "பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான தேசிய செயல் திட்டத்தைக் கண்காணித்தல்" எனும் திட்டத்தின் நிதி தொடர்பான இலக்கின் தகவல்கள் மட்டுமே மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளத்தில் காணப்படும் 2020 முன்னேற்ற அறிக்கையில் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே கிடைக்கப்பெற்ற தகவல்கள் இந்தச் சுட்டியின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்குப் போதுமானதாகவும் முழுமையானதாகவும் இல்லை. இந்தத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் காலப்போக்கில் எவ்வாறு மாறியுள்ளன என்பதைத் தீர்மானிப்பது சாத்தியமில்லை.

12. இளவயது கர்ப்பத்தைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு மாவட்ட அளவில் திட்டங்களை செயல்படுத்துதல்

13. ஆசிரியர்களுக்குப் பயிற்சியளித்தல்

14. பாடசாலை அதிபர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

15. பொலிஸ் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவித்தல்

16. சுகாதாரத் துறை ஊழியர்கள் மற்றும் நிபுணர்களுக்குப் பயிற்சியளித்தல்

17. மருத்துவப் பட்டப் பின்படிப்பு நிறுவனத்தில் மருத்துவர்களைப் பயிற்றுவித்தல்

18. சிறுவர் காப்பக நிர்வாக அமைப்பின் ஊழியர்களைப் பயிற்றுவித்தல்

19. சிறுவர்களுக்கு எதிரான இணையக் குற்றங்களை ஒழிப்பதற்காக IEC வெளியீடுகளைத் தயாரித்தல்

20. உலக குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினத்தைக் கொண்டாடுதல்

21. பெண் குழந்தைகளுக்கான சர்வதேச தினத்தைக் கொண்டாடுதல்

22. சிறப்பு விசாரணை வழக்குகள் மற்றும் நீதித்துறை விவகாரங்களைக் கண்காணித்தல்

23. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதற்காக காணொளிப்பதிவு (வீடியோ) ஆதாரங்களைப் பயன்படுத்துதல்

24. காணொளிப்பதிவு ஆதாரங்கள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளைப் பேணுதல்

25. இணைய கண்காணிப்பின் கீழ் விசாரணைகளை மேற்கொள்ளல்

இந்தத் திட்டங்களுக்காக 2018/19ல் ரூ. 32.91 மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாகவும் பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

2019 மற்றும் 2020ம் ஆண்டுகளுக்கான முன்னேற்ற அறிக்கைகளில் சுட்டி 12 தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் தொடர்பிலான தகவல்கள் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளத்தில் வழங்கப்பட்டுள்ளன.

"பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பதற்கான தேசிய செயல் திட்டத்தைக் கண்காணித்தல்" திட்டத்திற்கு 2020ல் ரூ.0.08 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுப்பட்டதாக 2020 முன்னேற்ற அறிக்கையின் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

ஆகவே தகவல் வெளிப்படுத்-தப்படவில்லை என இந்தச் சுட்டி வகைப்படுத்தப்படுகிறது.

## பின்னிணைப்பு 3:

ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
DEPARTMENT OF NATIONAL BUDGET
මහා භාණ්ඩාගාරය, මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
பொதுத்திறைசேரி, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, கொழும்பு 01, இலங்கை
General Treasury, Ministry of Finance and Mass Media, Colombo 01, Sri Lanka
Web Site: www.treasury.gov.lk e-mail: budget@nbd.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. BD/CBP/4/1/2-2018 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி. / Date 31.07.2017

All Secretaries to Ministries
Chief Secretaries of Provincial Councils
Heads of Departments
Chairmen of Corporations and Statutory Boards

**Addendum (II) to the Budget Call – 2018**
**Guidelines for the Preparation of 2018 Budget Estimates**

This is further to the National Budget Circular no 2/2017 dated 25.07.2017 on "guideline and directions for the preparation of Annual Budget Estimates". In this addendum, it is expected to give further direction in mainstreaming the three new policy strategies accepted by the government.

1. Sustainable Development Goals
2. Gender Response Budgeting
3. Empower Differently able People

**(1.) Sustainable Development Goals**

1.1 Sri Lanka as a member state of the United Nations, is a signatory to the adaption of 2030 Agenda for Sustainable Development, which comprises of 17 Goals and 169 Targets and 244 indicators. The Sustainable Development Goals (SDGs) aim to end poverty, hunger and inequality, protect environment, improve access to health and education, build peace, justice and strong institutions etc. Achievement of these Sustainable Development Goal (SDG) targets should directly be linked with budgeting, i.e. allocation of resources for identified projects and programmes. Therefore, it is expected to align SDGs with the national development strategy from 2018. A select Committee of Parliament on the United Nations 2030 Agenda for Sustainable Development has also been set up to facilitate and monitor the achievement of the goals and targets.

1.2 Therefore, the spending agencies are directed for mainstreaming the SDG goals within the current and future development activities and aligning with the annual budget. The main objective of this process is to identify and localize the global agenda of SDG, which particularly relevant to the spending agency and focus on development strategies that directly support to achieving the targets of such SDGs.

1

අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் நாயகம் / Director General 0094-11-2484665 0094-11-2484639 (Fax)
කාර්යාලය / அலுவலகம் / Office 0094-11-2484669 0094-11-2484853
ෆැක්ස් අංකය / தொலைநகல் இல / Fax No. 0094-11-2484807

1.3 The Ministry of Sustainable Development and Wildlife will facilitate respective Ministries in achieving the SDG targets and supervision of the 2030 Agenda. The Department of National Planning will ensure the integration of SDGs and targets into the National Development Framework and the line ministries are responsible to incorporate those when designing the development programs and projects.

1.4 The Department of Census and Statistics is also involved in supporting the implementation of SDGs to ensure that SDG are achieved at the end of 2030. In localizing the SDG indicators which relates to respective Ministries/ Departments and other Institutions may refer the "Status of Sustainable Development Goals Indicators in Sri lanka: 2017" published by the Department of Census and Statistics.

**(2.) Gender Response Budgeting**

2.1 The SDG goal 5 is to achieve gender equality and empower all women and girls. Since, the women and girls represent more than half of the total population in Sri Lanka, gender equality to be ensured when allocating resources wherever possible. Accordingly, the KPIs developed by the Ministry of Women and Child Affairs is in annexure 1 for consideration by the Ministries when preparing the budget estimates and indicate the KPIs that is expected to be achieved in 2018.

2.2 As per the approval of the Cabinet of Ministers on 07.06.2016 the Plan of Action to address sexual and gender based violence in Sri Lanka to be implemented under the medium term budgetary framework from 2017-2019. Main objective of this action plan is "violence free life for women and children". As this plan covers multi sectoral implementation, the secretaries of relevant line ministries are required to take necessary actions to adhere to the plan.

**(3.) Empower Differently able People**

3.1 Mainstreaming differently able people would be another major area that is also to be addressed in 2018 Budget. The Cabinet of Ministers has already directed to implement the "Sri Lanka National Action Plan for Disability" which has been prepared based on the National Policy on Disability and designed for implementation of 7 thematic areas namely, Empowerment, Health and Rehabilitation, Education, Work and Employment, Mainstreaming and Enabling Environment, Data and Research and Social Institutional Cohesion. In line with the Government Policy and the Action Plan all spending agencies are required to identify focus areas and relevant activities on empowering the differently able community and mobilizing them as an equally useful segment of the society.

(4) As the 2018 budget will be formulated based on the Performance Based Budgeting, you are kindly requested to consider the above when requesting resources for achieving measurable outputs / outcomes.

(5) If you need any clarifications on the above, please contact the relevant subject officer of the Department of National Budget.

K.D.S. Ruwanchandra
Director General

Copies to:

I. Secretary to the President
II. Secretary to the Prime Minister
III. Secretary to the Cabinet of Ministers
IV. Auditor General

**Annexure 01**

## KPIs to Achieve Gender Equality & Empower All Women & Girls

1) Increased % of Women Participation in Labour Force.

2) Increased number of female headed Households that have built houses through financial assistance programs.

3) Number of Public Institutions that have maintain Gender Disaggregated Data System.

4) Increased % of females who obtain NVQ certification and number enter in to employment in technical vocational field.

5) Number of female entrepreneurs engage in sustainable enterprises utilizing SME loans /subsidies.

6) Number of national policies and projects aimed at employing the female migrant returnees and potential migrant female.

7) Increased number of females in decision making positions attained through policy interventions.

8) Number of Institutions that have taken measures to improve gender friendly working environment and day care facilities etc.

9) Number of policies and guidelines are in placed and effectively implemented to ensure gender concerns are addressed in rescue, relief, rehabilitation and reconstruction stages of disasters.

10) Number of Women and Children Bureau units of police stations are capacitated to handle women and children issues in a sensitive and effective manner.

11) Number of gender discriminatory laws, policies and procedures that are amended, enacted and / or implemented.

12) Amount of allocation made to complement Multi Sectoral National Action Plan to address Sexual and Gender Based Violence.

## பின்னிணைப்பு 4:

නිපුණතා සංවර්ධන, වෘත්තීය අධ්‍යාපන, පර්යේෂණ හා නව නිපැයුම් රාජ්‍ය අමාත්‍යාංශය
திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு
**State Ministry of Skills Development, Vocational Education, Research & Innovation**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ යොමුව<br>எனது இல.<br>My Ref. | MSVRI/ADM/04/03/Info.act/2021 | ඔබේ යොමුව<br>உமது இல.<br>Your Ref. | | දිනය<br>திகதி<br>Date | 2021.01.19 |

ලියාපදිංචි අංක: MSVRI/ADM/04/03/Info.act/2021 – 97, 98

වෙරිටේ රිසර්ච් ( ප්‍රයිවට් ) ලිමිටඩ්
නො. 5ඒ, පිටත පොලිස් උද්‍යාන මාවත,
කොළඹ 05.

<u>**2016 අංක 12 දරන තොරතුරු දැන ගැනීමේ අයිතිවාසිකම පිළිබඳ පනත අනුව තොරතුරු ලබාදීම**</u>

ඔබ විසින් යොමු කරන ලද 2021.10.18, 2021.11.08 දිනැති තොරතුරු ලබා ගැනීමේ අයදුම්පත්‍ර මගින් විමසීම් කර ඇති කරුණු සම්බන්ධයෙන් අදාල අංශ වෙතින් තොරතුරු කැඳවීම් කර ඇති බැවින් ඊට අදාලව අප වෙත පිළිතුරු ලද වහාම ඔබ වෙත පනතේ විධිවිධාන ප්‍රකාරව පිළිතුරු යොමු කිරීමට කටයුතු කරන බව වැඩිදුරටත් දන්වා සිටිමි.

**ජී.එස්. කන්නන්ගර**
තොරතුරු නිලධාරි / අධ්‍යක්ෂ (ආංශික සංවර්ධන)
ලේකම් වෙනුවට


නිපුණතා සංවර්ධන හා වෘත්තීය අධ්‍යාපන අංශය
திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் கல்வி பிரிவு
Skills Development & Vocational Education Division
354/2, "නිපුණතා පියස" ඇල්විටිගල මාවත, කොළඹ 05
354/2, "நிபுணதா பியச" எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05
354/2, "Nipunatha Piyasa", Elvitigala Mawatha Colombo 05
කාර්යාලය / அலுவலகம் / Office
(+9411)2136500
(+9411)2597804
info@skillsmin.gov.lk
www.skillsmin.gov.lk

පර්යේෂණ හා නව නිපැයුම් අංශය
ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு
Research & Innovation Division

# பின்னிணைப்பு 5:

ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம்
**DEPARTMENT OF NATIONAL BUDGET**

මුදල් අමාත්‍යාංශය நிதி அமைச்சு Ministry of Finance

මහා භාණ්ඩාගාරය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව பொதுத்திறைசேரி, கொழும்பு 01, இலங்கை General Treasury, Colombo 01, Sri Lanka

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | BD/ADM/01/04/01/2021 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி.<br>Date | 16/11/2021 |

Veritae Research (Pvt) Ltd
No. 5A, Police Park Place, (Off Police Park Avenue)
Colombo 05

**Application to receive information under the Right to Information Act No. 12 of 2016**

This refers to your Right to Information Application dated 18/10/2021 and the forwarding letter sent by the Ministry of Finance on 27/10/2021.

Accordingly, the details are submitted herewith for the information requested no. 5. (1) to 5. (7) of the above letter.

i. No. 1, 3, 4, 5, 6 and 7 – As per the Budget Circular 2/2019 Gender disaggregated data to be maintained by each Ministry and those information to be submitted to the Ministry of Women and Child Affairs. Therefore, such information to be obtained from the State Ministry of Women and Child development, Pre-School & Primary Education, School Infrastructure & Education Services.

ii. No. 2 – Details attached

G.M.J.K. Gunawardhana
Information Officer- RTI
Additional Director General

Copy: Addl. Secretary / Information Officer,
Ministry of Finance

## பின்னிணைப்பு 6:

කම්කරු දෙපාර්තමේන්තුව
தொழில்திணைக்களம்
DEPARTMENT OF LABOUR
සැලසුම්, පර්යේෂණ, පුහුණු හා ප්‍රකාශන අංශය
திட்டமிடல், ஆராய்ச்சி,பயிற்சி மற்றும் பிரசுரிப்புகள் பிரிவு
Planning, Research, Training and Publication Division

My Number } PRT/04/08/2021 (II වෙළුම)

Your Number } ML/ES/04/තොර.දැන.-1

Date } 2021.11.02

True Copy

03 NOV 2021

ලේකම්
කම්කරු අමාත්‍යාංශය

**2016 අංක 12 දරණ තොරතුරු දැනගැනීමේ අයිතිවාසිකම පිළිබඳ පනතේ සඳහන් පරිදි තොරතුරු ඉල්ලා සිටීම**

උක්ත කරුණ සම්බන්ධයෙන් ඔබේ සමාංක හා 2021.10.22 දිනැති ලිපිය හා බැඳේ.

02. ශ්‍රම බලකායෙහි කාන්තා දායකත්වය වර්ධනය කිරීමෙහිලා වැඩසටහන් ක්‍රියාත්මක කිරීම කම්කරු දෙපාර්තමේන්තුවේ මූලික අරමුණු හා අභිප්‍රායන්ගෙන් බැහැර වුවක් මෙන්ම විෂය පථයෙන් ඔබ්බෙන් වූ කරුණකි. නමුත්, පෞද්ගලික අංශයේ සේවයේ නියුතු කාන්තාවන්ගේ වෘත්තීය සුරක්ෂිතතාවය හා සුභසාධනය උදෙසා කම්කරු දෙපාර්තමේන්තුවේ කාන්තා හා ළමා කටයුතු අංශය විවිධ වැඩසටහන් ක්‍රියාත්මක කරන අතර, එම වැඩසටහන් තුළින් ශ්‍රම බලකායෙහි කාන්තා දායකත්වය වර්ධනය කිරීමෙහිලා වක්‍රාකාර දායකත්වයක් සැපයේ.

03. ඒ අනුව, 2018, 2019 හා 2020 වර්ෂ තුළ ශ්‍රම බලකාය සඳහා කාන්තා දායකත්වයේ ප්‍රතිශතය සහ ශ්‍රම බලකාය වෙත දායකත්වය සපයන කාන්තා සේවිකාවන්ගේ වෘත්තීය සුරක්ෂිතතාවය හා සුභසාධනය උදෙසා කම්කරු දෙපාර්තමේන්තුව විසින් 2018, 2019 සහ 2020 වර්ෂයන් තුළ දී සිදු කරන ලද විශේෂ දැනුවත් කිරීමේ වැඩසටහන් සහ විශේෂ පරීක්ෂණ සම්බන්ධයෙන් තොරතුරු ඇමුණුම 01 මගින් ඉදිරි කටයුතු සඳහා මේ සමඟ කාරුණිකව ඉදිරිපත් කරමි.

බී කේ ප්‍රභාත් චන්ද්‍රකීර්ති
කම්කරු කොමසාරිස් ජනරාල්

ඒකීයල බී. කේ. ප්‍රභාත් චන්ද්‍රකීර්ති
කම්කරු කොමසාරිස් ජනරාල්
කම්කරු දෙපාර්තමේන්තුව
කොළඹ 05

International Year for the elimination of Child Labour 2021
"Let's continue to fight against child labour"

10 වන මහල, "මෙහෙවර පියෙස" ගොඩනැගිල්ල, කොළඹ 05.
10ஆம் தளம், "மெஹெவர பியெச" கட்டிடம், கொழும்பு 05.
10th Floor, "MehewaraPiyesa" Building, Colombo 05.

} 011-2582647 } 011-2504208 } prtdivisiondol@gmail.com } www.labourdept.gov.lk

# இறுதி குறிப்புகள்

1. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வலைதளம், "பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட முயற்சிகள் தொடர்பான கண்ணோட்டம்" https://www.ilo.org/wcmsp5/groups/public/---dgreports/---gender/documents/publication/wcms_111403.pdf (பெறப்பட்ட திகதி: 25 February 2022)

2. ஐக்கிய நாடுகள் பெண்கள் வலைதளம், "பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்டத்தை எளிதுபடுத்துபவர்களுக்கான வழிகாட்டி" (2016) https://www2.unwomen.org/-/media/field%20office%20africa/attachments/publications/2016/03/guide%20bsg%20-%20anglais%20-%20final.pdf (பெறப்பட்ட திகதி: 25 February 2022)

3. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வலைதளம், "பால்நிலை பொறுப்பு வரவு செலவுத்திட்ட முயற்சிகள் தொடர்பான கண்ணோட்டம்" https://www.ilo.org/wcmsp5/groups/public/---dgreports/---gender/documents/publication/wcms_111403.pdf. (பெறப்பட்ட திகதி: 25 February 2022)

4. ஸ்டோட்ஸ்கி,"பாலின சமத்துவத்தை மேம்படுத்த நிதிக் கொள்கைகள் மற்றும் பொது நிதி முகாமைத்துவத்தைப் பயன்படுத்துதல் சர்வதேச ரீதியிலான கண்ணோட்டம்" (2020). https://www.internationallawyersproject.org/post/using-fiscal-policy-and-public-financial-management-to-promote-gender-equality (பெறப்பட்ட திகதி 25 February 2022)

5. தற்போது, மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு

6. ஐக்கிய நாடுகளின் வலைதளம், நிலையான அபிவிருத்தி இலக்குகள், இலக்கு 5: பாலின சமத்துவத்தை அடைவதுடன் அனைத்துப் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் அதிகாரமளித்தல். https://sdgs.un.org/goals/goal5 (பெறப்பட்ட திகதி 1 March 2022)

7. ஆண்டு 1ல் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிடம் கோரப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைக்கு அமைய 2018/19 ஆண்டுக்கான மொத்த செலவினம்

8. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளத்தில் கிடைக்கும் முன்னேற்ற அறிக்கைகளுக்கு அமைய மொத்த செலவினம் என்பது 2019 மற்றும் 2020ம் ஆண்டுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளின் மொத்தத் தொகை ஆகும். ஆண்டு இரண்டில் பெறப்பட்ட தகவல் கோரிக்கைக்கான பதிலில் இதற்கான விபரங்கள் வழங்கப்படவில்லை. http://www.childwomenmin.gov.lk/action-plans/ministry-action-plans/progress-2017 (பெறப்பட்ட திகதி 02 April 2022).

9. வரம்புகளைப் பற்றிய விபரங்களுக்கு மதிப்பீட்டு முறைகளைப் பார்க்கவும்

10. இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்கு பின்னிணைப்பு 1 ஐப் பார்க்கவும்

11. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு

12. திறன் விருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல் அறியும் கோரிக்கைக்கான பதிலுக்கு பின்னிணைப்பு 4 ஐப் பார்க்கவும்

13. நிதியமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் அறியும் கோரிக்கைக்கான பதிலுக்கு பின்னிணைப்பு 5 ஐப் பார்க்கவும்

14. இச் சட்டத்தின் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, பிரசை ஒவ்வொருவரும், ஒரு பகிரங்க அதிகாரசபையின் உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தகவலைப் பெற அணுகுதலுக்கான உரிமையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்" என 2016ம் ஆண்டின் 12ம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறிப்பிடுகிறது.

15. வெரிட்டே ரிசேர்ச், இலங்கையில் அமைச்சரவையை அமைப்பதற்கான ஒரு பகுத்தறிவு முறை: வெள்ளை அறிக்கை (ஓகஸ்ட் 2020). https://www.veriteresearch.org/publication/cabinet-white-paper-sri-lanka/

16. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வலைதளம்,"எதிர்கால வரவுசெலவுத்திட்டத்தின் திட்டமிடலுக்கான பாலின அடிப்படையிலான வரவுசெலவுத்திட்டம்" http://www.childwomenmin.gov.lk/storage/app/media/cir%20sgbv%20-compressed.pdf (பெறப்பட்ட திகதி 7 April 2022)

17. PublicFinance.lk வலைதளம், "வரவு செலவுத்திட்ட வாக்குறுதிகள்: பாராளுமன்றத்திற்கு அப்பால், 2018 ஆண்டிறுதி மதிப்பீடுகள்" https://dashboards.publicfinance.lk/budget-promises/wp-content/uploads/2021/10/Budget-Promises-2018-End-Year-English-1.pdf (பெறப்பட்ட திகதி 7 April 2022)

18. அரசாங்கத்தின் முயற்சிகளும் வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகளும் 2020ம் ஆண்டில் கோவிட் – 19 பெருந்தொற்றினால் தடைப்பட்டிருக்கக்கூடும்,. இதன் மூலம் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றமும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியம்.

19. தொழில் அமைச்சிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் அறியும் கோரிக்கைக்கான பதிலுக்கு பின்னிணைப்பு 6 ஐப் பார்க்கவும்

20. மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு

21. அரசாங்கத்தின் முயற்சிகளும் வரவு செலவுத்திட்ட நடவடிக்கைகளும் 2020ம் ஆண்டில் கோவிட் – 19 பெருந்தொற்றினால் தடைப்பட்டிருக்கக்கூடும்,. இதன் மூலம் பிரதான செயலாற்றுகை சுட்டிகளின் முன்னேற்றமும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடும் என்பதைக் கவனத்தில் கொள்வது முக்கியம்.

ISBN: 978-624-5514-24-33

Verité Research
Strategic Analysis for Asia

A | No. 5A, Police Park Place, Colombo 5
T | +94 11-2055544
E | reception@veriteresearch.org
W| www.veriteresearch.org